ஓம்

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம்:— தாதுவரு வைகாசிமீ ருஉ (1936 மே 18) திங்கட்கிழமை { இலக்கம்—கக

# கந்த புராணக் கவி நுட்பம்

## விநாயகர் பரம்பொருளென்பதை விளக்கியவாறு

திகடசக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகடசக்கரன்மெய்ப்பதம்போற்றுவாம்

(முற்றொடர்.)

இத்திருவிருத்தத்திலே திகழ்தசக்கரச் செம்முக மைந்துளான் எனக் குறித்தது சதாசிவ மூர்த்தத்தையாகும். இச் சதாசிவமூர்த்தி படிக நிறம், சடைமுடி, ஐந்து திருமுகம், பத்துத் திருக்கரம், ஒரு தேகம், இரு திருவடி முதலியவற்றோடு விளங்குபவர்; வலத் திருக்கரங்களில் சூலம் மழு வாள் வச்சிரம் அக்கினி யென்பனவும் இடத் திருக்கரங்களில் அபயம் பாசம் மணி சர்ப்பம் அங்குசம் என்னுமிவைகளும் திகழ்தலால் "திகழ்தசக்கரம்" என்றார்; மூவிலைச் சூலம் இச்சை ஞானம் கிரியை யென்னுமிவைகளைக் குறிப்பதாகும்; இப்படியே இறைவன் பரித்திருக்கும் ஒவ்வொரு படைகளும் தத்துவார்த்தங்களோடு கூடியனவாகும்; அவற்றை ஈண்டு விரிவஞ்சிக் கூறாது விடுத்தாம்; விரிவைச் சாதாசிவசொரூபம்முதலியவற்றிற்காண்க.

செம்முகம் ஐந்தாவன: ஈசானம் தற்புருஷம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்பன; இத் திருமுகங்களுள் ஈசானத் திருமுக வாயிலாகவே காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களையும் அருளிச்செய்தனர்; இத்திருமுகங்களைந்தும் ஆகம பேதங்களை யருளிச்செய்ததற்கு வாயிலாக விருந்தமையினாலும் திருவருளொழுகும் கருணை விழிகளோடு திருப்புன்முறுவலோடும் கூடியனவாதலாலும் "செம்முகமைந்து" எனவிதந்து கூறப்பட்டன. பராசத்தியோடு கூடியுள்ள இச் சதாசிவமூர்த்தம் கன்மசாதாக்கியத் திருவடிவமும்; ஆன்மகோடிகள் தம்மை வழிபட்டு ஈடேறும் வண்ணம் கொண்டருளிய விசேஷமான திருக்கோலம் இச் சதாசிவமூர்த்தமாதல் பற்றிப் போலும் காப்புச்செய்யுளின் முதலில் இம் மூர்த்தமே விதந்தெடுத்துக் கூறப்படலாயிற்று. "இனி சூரியன் தேர்ச்சில்லாக அமைப்பெபறறமை பெருமான் திரிபுரதகனஞ் செய்ப எழுந்தகாலத்திலாதலின், பெருமானுடைய பரமேசுவரத் திருக்கோலமும் இங்கே போற்றப்படலாயிற்று திரிபுரதகனமென்பதற்கு முப்புரங்களை யெரித்தல் என்பது ஒருகருத்து. இக்கருத்தே புராணங்களிற் பெரும்பாலும் எடுத்துச் சொல்லப்படுவது; முப்புரமெரித்தல் என்பதற்கு ஆன்மாக்களைப் பந்தித்துள்ள மும்மலங்களின் வலியைக் கெடுத்தல் என்பது ஞானக் கருத்தாகும்; இதனை,

"முப்புரமாவது மும்மலகாரியம்
அப்புரம் எய்தமை ஆர்அறிவாரே"

என்னுந் திருமூலநாயனர் திருவாக்கான் உணர்தலாகும். பெருமான் திரிபுரதகனஞ் செய்ய எழுந்தருளிய [illegible]

களுள் ஒன்றாக அமைந்த சூரியன் விநாயகப் பெருமானுடைய திருவயிற்றின்மேல் இரத்தினமாக விளங்குவன் என அடை கொடுத்தமையின் விநாயகப் பெருமான் ஒருகாலத்துக் கொண்ட விசேடத் திருக்கோலமும் இங்கே தியானிக்கப்படலாயிற்று சூரியன் திருவயிற்றின்கண் மணியாக வுற ஏனைய சந்திரன் முதலிய கிரகங்களும் விநாயகப் பெருமானுடைய பரமேசுவரத் திருக்கோலத்தில் அங்காங்கு உறைவன என்பதுதானேபெறப்படும்: விநாயகக் கடவுள் முன்னொரு காலத்தில் இந்திரனொருவன் கொண்ட கர்வத்தைப் பங்கஞ் செய்து அவனுக்குத் திருவருள் புரியும் வண்ணம் பரமேசுரத் திருக்கோலங் கொண்டருளினர் என்பது சரித்திரம்; வழிபடும் அன்பர்கள் விரும்பிய சித்திகளை யெல்லாம் தவறுதலின்றி உள்ள உள்ளபடி அருளுதலால் மெய்ப்பத மென்றார்; பதம் என்பதன் கருத்து அடி; திருவடியைக் குறிக்கும் பலசொற்கள் இருப்பவும் ஆசிரியர் இங்கே "பதம்" என்ற சொல்லைப் பிரயோகித்தனர் இச் சொல் அடையாளம், அளவை, அறுகம்புல், இருக்குமிடம், இன்பம், ஈரம், ஒளி, சமயம், செல்வம், சோறு, பதவி, பொருள், மாதிரம், வரிசை, வழி, வேதத்தின் ஒரு உறுப்பு முதலிய இருபத்தாறு மங்கலமான கருத்துக்களைக் கொண்டமையினாற் போலும்

இப் பதம் என்ற சொல்லை ஆசிரிய சுவாமிகள் ஆரம்பத்தில் உபயோகித்தருளினர்; போற்றுதல் – வாயாரவாழ்த்துதல்; வணங்கித் துதித்தல் முறையாதலின் போற்றுவாம் என்றதினுல் வணங்குதலும் செய்யப்படலாயிற்று என்பது பெறப்படும். பரமேசுரவடிவம் விசுவரூபம் என்பன உலகங்களெல்லாவற்றையும் தாங்கிநிற்கும் வடிவமாம்; இவ்வடிவத்தைக் கொண்ட வல்லவர் பரமபி[illegible]

பாவர்; சிவபெருமான் விநாயகர் என்னுமிருமூர்த்திகளும் ஆன்மாக்கள் ஈடேறும் வண்ணம் ஒவ்வொரு சமையத்தில் இவ் வடிவங்களைக் கொண்டனராதலின் பரமபதியாகிய சிவத்திற்கும் விநாயகருக்கும் பேதமில்லையென்பது பெறப்படும். தனக்கு மேலான நாயகன் இல்லாதவன விநாயகன். தேவர் முனிவர்க்கு நேர்ந்த விபத்தைத் திரிபுர

(தொடர்ச்சி ௫-ம் பக்கம்)

திருவாரூர் - பண் - தக்கேசி.

கட்டமும்பிணியுங்களைவானைக்
காலற்சீறியகாலுடையானை
விட்டவேட்கைவெந்நோய்களைவானை
விரவினல்விடுதற்கரியானைப்
பட்டவார்த்தைபடநின்றவார்த்தை
வாராமேதவிர்ப்பணிப்பானை
அட்டமூர்த்தியைமட்டவிழ்சோலை
யாரூரானைமறக்கலுமாமே.

காக்கின்றமழையாப்பொழிவானைக்
கலைக்கெலாம்பொருளாயுடன்கூடிப்
பார்க்கின்றவுயிர்க்குப்பரிந்தானைப்
பகலுங்கங்குலுமாகிநின்றானை
ஓர்க்கின்றசெவியைச்சுவைதன்னை
யுணருநாவினைக்காண்கின்றகண்ணை
ஆர்க்கின்றகடலைமலைதன்னை
யாரூரானைமறக்கலுமாமே.

—சுந்தரமூர்த்திசுவாமிகள்.

# ஸேர். ராதாகிருஷ்ணன் சொற் பெருக்கு

## "உண்மையும் கடவுளும் ஒன்றே"

"சர்வமதங்களும் ஒரே உண்மையையே போதிக்கின்றன; அவ்வுண்மையை—பரம்பொருளை—அறிய ஒவ்வொருவரும் முயற்சிக்கவேண்டும்."

இம்மாதம் 7ந் திகதி வியாழக்கிழமை மாலை பம்பாய் கோவாலியா ஜிஹாங்கிர் மண்டபத்தில் சர்வமதஸ்தர்கள் மகாநாடு கூடியது. ஸர். எஸ். ராதா கிருஷ்ணன் தலைமைவகித்தார். அநேக மதஸ்தர்களும் பிரபலஸ்தர்களும் சமூகமளித்திருந்தனர். பார்ஸி குரு ஜோரோஷ்டர், ராமகிருஷ்ண கிருஷ்ணர், யேசுநாதர், புத்தர், முகமது நபி முதலியவர்களின் படங்கள் மேடைமீது வைக்கப்பட்டிருந்தன.

ஸர். லல்லுபாய் சாமல்தாஸ் ஸர் சூனிலால் வி மேத்தா, ஸர் ஹோர் முன்ஜி ஏடன்வாலா, ஸர் மானுபாய் மேத்தா, ஸர் ஹோர்மாஸ டியார்டஸ்டூர், கே. நடராஜன், ஸ்வாமி விஸ்வாநந்தர், ஸ்ரீமதி சோபியா வாடியா முதலிய பிரபலஸ்தர்கள் வந்திருந்தனர்.

வரவேற்புக்கழகத் தலைவர் ஸ்ரீ எம் ஆர். ஜெயக்கர் ராமகிருஷ்ண ஜயந்தி நிர்வாக சபையின் அழைப்பிற்கு இணங்கி மகாநாட்டிற்குவந்திருந்த அனைவரையும் வரவேற்று உபசரித்தார். அவர் மேலும் பேசியதாவது:—

ராம கிருஷ்ண பரம ஹம்ஸரைத் தெரிந்து கொள்ளாதவர்கள் இருக்க முடியாது. இந்தியாவின் பெருமையை உலகமுழுதும் அறியும்படி செய்தபெரியாரில் அவரும் ஒரு முக்கியஸ்தர். இந்தியா அவருடைய சிறந்த சேவையை ஒருவரும் மறக்கவே முடியாது. அவருடைய ஜெயந்தி விழாவைக் கொண்டாடுவதன் மூலம் அவருடைய உபதேசங்களைப் பின்பற்ற வேண்டியது அவசியம். உலக முழுதுமே அவருடைய உபதேசங்களைப் போற்றுகின்றது. உண்மையும் கடவுளும் ஒன்றே. அதை அநேகர் அநேக விதமாக அழைக்கின்றனர். இல[illegible]

தான் அவருடைய உபதேசத்தின் அடிப்படையான தத்துவம். சுயேச்சை, சுதந்தரம், நாகரீகம் இவைகளைக் குறித்துப் பிரமாதமாகப்பேசிவரும் ஐரோப்பியர் தாங்கள் பேசிவரும் தத்துவங்களை மறந்து ஆபிரிக்காவில் தங்கள் தத்துவத்துக்கு நேர்மாறாக நடந்துகொள்கின்றனர். பேச்சொன்று செய்கையொன்றமாக இருந்து வருகிறது. இதைவிட அநீதி இவ்வுலகில் வேறு இருக்க முடியுமா?

### சர். ராதாகிருஷ்ணன் கருத்து.

ஸர். எஸ் ராதாகிருஷ்ணன் பின்னர்ப் பேசியதன் சாராம்சம் வருமாறு:—

ராமக்கிருஷ்ண ஜயந்தி விழா சம்பந்தமாக இம்மாதிரிச் சர்வமதஸ்தர்கள் மகாநாட்டைக் கூட்டுவது மிகப் பொருத்தமான காரியமாகும். மத சம்பந்தமாக இந் நாட்டில் அதிகமான ஜாதி மதச் சண்டைகள் இல்லையெனினும், அரசியல் சம்பந்தமாக ஜாதிமதச் சண்டைகளும் மனத்தாங்கல்களும் இருக்கின்ற நிலைமையில் இம்மாதிரி மகாநாடுகள் விசேஷ நன்மையை அளிக்குமென்பதிற் சந்தேகமில்லை. சர்வமதங்களும் ஒரே உண்மையைப் போதிக்கின்றன. அந்த உண்மையை-பரம்பொருளை - அறிய ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். பரம்பொருள் எங்கும் நிறைந்திருக்கிறார். விடாமுயற்சியும், தன்னலமறுப்பும், தியாக சிந்தையும், விவேகமும் இருந்தால் பரம்பொருளை அறியலாம். எல்லா மதங்களும் இந்த ஒரே உண்மையைத்தான் போதிக்கின்றன.

உண்மையை உணர அஞ்ஞான இருள் ஒழிய வேண்டும். நாகரீகத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஆபிரிக்காவில் செய்யப்பட்ட அநீதியைக் குறித்து இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது அதற்குக் காரணம் சம்பந்தப்பட்ட தேசத்தினர் தங்களுடைய மதத்தின் உண்மையையும் தத்துவங்களையும் அறிந்து கொள்ளாததேயாகும். சுயநலமும் புத்தியீனமையும் ஜனங்களிடம் இருக்கும் வரை இம்[illegible]ச் சம்பவங்கள் நடைபெறாமலிருக்க முடியாது. மனிதர்களின் தத்துவங்களில் மாறுபாடுகளிருந்து வருவதால் தான் உலகில் ஒற்றுமைக் குறைவும் கேட்சிப் பிணவுகளும் ஏற்பட்டு வருகின்றன. மனிதர்கள் இன்னும் பரிபக்குவமடையவில்லை. மிருக சுபாவம் இன்னும் அவர்களை விட்டு முழுதும் நீங்கவில்லை. ஆனல் மிருகங்களை விட அவர்கள் அதிக சாமர்த்திய சாலிகளானவர்கள். என[illegible]

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# லாஜபத்ராய் துதி

[ தேசிய கவி - சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் இயற்றியவை ]

## விருத்தம்

1 விண்ணகத்தே யிரவிதனை வைத்தாலும்
அதன்கதிர்கள் விரைந்து வந்து
கண்ணகத்தே யொளிதருதல் காண்கிலமோ?
நின்னையவர் கனன்றிந் நாட்டு
மண்ணகத்தே வாழாது புறஞ்செய்தும்
யாங்களெலா மறக்கொ ணுதேம்
எண்ணகத்தே, லாஜபதி, யிடையின்றி
நீ வளர்தற் கென்செய் வாரே?

2. ஒருமனிதன் றனைப்பற்றிப் பலநாடு
கடத்தியவற் கூறு செய்தல்
அருமையிலை எளிதினவர் புரிந்திட்டா
ரென்றிடினும் அந்த மேலோன்
பெருமையைநன் கறிந்தவனைத் தெய்வமென
நெஞ்சினுளே பேட்பிற் பேணி
வருமனித ரெண்ணற்ருர் இவரையெலாம்
ஓட்டியெவர் வாழ்வ திங்கே?

3. பேரன்பு செய்தாரில் யாவரே
பெருந்துயரம் பிழைத்து நின்றுர்?
ஆரன்பு நாரணபா லிரணியன்சேய்
செய்ததினு லவனுக் குற்ற
கோரங்கள் சொலத்தகுமோ? பாரதநாட்
டிற்பத்தி குலவி வாழும்
வீரங்கொள் மனமுடையார் கொடுந்துயரம்
பலவடைதல் வியத்தற் கொன்றே?

# "சர்வதேச சங்கத்தால் ஒரு பலனுமில்லை"

## இத்தாலி இந்தியாவோடு எந்தவழியிற் சிநேகமோ?

அபிசீனியா தினக் கொண்டாட்டத்தில் ஸ்ரீமான் சக்கரைச் செட்டியார், ஸ்ரீமான் சத்தியமூர்த்தியாகிய இருவரும் நிகழ்த்திய சொற்பொழிவுகள்.

இம்மாதம் 9-ம் திகதி சென்னை கடற்கரையிற் கூடிய அபிசீனியா தினக் கொண்டாட்டக்கூட்டத்தில் ஸ்ரீமான் வி. சக்கரைச்செட்டியாரும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தியும் நிகழ்த்திய சொற்பொழிவுகள் வருமாறு:—

ஸ்ரீமான் வி. சக்கரைச் செட்டியார் பேசியதாவது:—

இது மிகவும் துக்காசரமான கூட்டம். எதியோப்பியா பைபிளில் பழைய ஏற்பாட்டில் கூடப் பிரசித்தி பெற்றது. தங்கத்திற்குப் பெயர் போனது. அந்தத் தங்க ஆசைப் பேயே இப்போது இத்தாலி அபிசீனியாவை வென்றதற்குக் காரணம், நாகரிகத்தைப் பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. இது நாகரிகமல்ல வீண் வேஷமே. நாகரிக மடைந்ததாகக் கூறிக்கொள்ளும் தேசங்கள் ஒன்றுமே செய்யவில்லை. ஆரம்ப முதலே ஸர்வதேச சங்கம் அபிசீனியாவுக்கு சேரிடையாக உதவியளிக்க உத்தேசிக்கவில்லை. அநாவசியமாக அபிசீனியாவுக்கு நம்பிக்கையளித்துக் கைவிட்டிருக்கக் கூடாது. முதலிலேயே உண்மையைக் கூறியிருக்கவேண்டும். பிரிட்டனுக்கு இத்தாலியை எதிர்க்கத் தைரியமில்லை. பிரான்ஸ் ஜெர்மனிக்கு விரோதமாக இத்தாலியின் உதவியை விரும்பியதால் இத்தாலியை எதிர்க்கத் துணியவில்லை. கூட்டுப் பொறுப்புச் சமாதானம் என்பதெல்லாம் வெறும் வேஷமே. கூடிய சீக்கிரத்தில் ஐரோப்பிய தேசங்கள் ஒன்றுக்கொன்று சண்டை போட்டுக்கொண்டு நாசமடையப்போகின்றன. முன்பு ரோமாபுரி தாக்கப்பட்டபோது இத்தாலிய சேனைகள் இங்கிலாந்தை விட்டு ஓடியதுபோல் வருங்காலத்தில் அபிசீனியாவை விட்டு ஓடநேரும். அப்போது அபிசீனியா மீண்டும் சுயேச்சை பெறும். கடவுள் வஞ்சம் தீர்க்கத் தாமதம் செய்த போதிலும் சும்மா பாதிப்பு விட்டுவிடமாட்டார். அபிசீனியா சர்வதேச சங்கத்தை நம்பியது தவறு. சர்வதேச சங்கம் உண்மையில் கொள்ளைக்காரர் கூட்டமென்று கவி ரவீந்திரநாத தாகூர் கூறியது வாஸ்தவம். கடவுள் இருப்பது உண்மையானால் அநியாயம் செய்பவர்களுக்குத் தண்டனை வராமலிராது. நாமெல்லாம் ஆஸ்திகர்கள். ஆகவே கடவுளைப் பிரார்த்திப்போம். அபிஸீனிய யுத்தத்தின் பயனாக நமது சுயேச்சைப் போராட்டம் கொஞ்சம் அதிகக் கஷ்டமாகும். நமக்குள் கட்டுப்பாடு அவசியம். நாம் ஸ்வராஜ்யம் பெற்றிருந்தால் அபிஸீனியாவுக்கு உதவியளித்திருப்போம். ஆப்பிரிக்காவே இத்தாலியின் ஸமாதியாகப் போகிறது.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி பேசியதாவது:—

எதியோப்பியா இறந்துவிட்டது. எதியோப்பியா நீடூழி வாழ்க. நான் இப்படிச் சொல்லுவது முன்னுக்குப் பின் விரோதமாகத் தோன்றலாம். ஆனால் இதுதான் உண்மை. ரோமாபுரி ஒருகாலத்தில் பெரிய ஏகாதிபத்தியமாயிருந்தது. ஸீஸர் போன்ற வீரர்களிருந்தனர். ஆயினும் அவையெல்லாம் அழியவில்லையா? அபிசீனியா இப்போதைய ரோமாபுரி ஏகாதிபத்தியமும் முன்னே இனியும் வீழ்ச்சியடைவது நிச்சயம். கல்கத்தாவிலுள்ள இத்தாலியர் கான்ஸல் ஜெனரல் எதியோப்பியாவைக் கேவலப்படுத்தியும் பிரிட்டனை[illegible]சர்வதேச சங்கத்தையும் தாக்கியும் பிரசுரங்கள் வெளியிட்டுத் தபால் மூலம் எல்லாருக்கும் அனுப்பிப் பிரசாரம் செய்து வருகிறார். கவர்ன்மெண்டார் நமதேசத்தவரின் கடிதங்களை வழிமறித்துத் திருடியும் சட்டசபையில் நமக்கு விரோதமாக உபயோகிக்கின்றனர். ஆனால் இந்த இத்தாலியக் கான்ஸலின் பிரசாரத்தைச் சிறிதும் தடுக்கவில்லை. பண்டித ஜவஹர்லால் நேரு அபிஸீனியத் தினத்தைக்கொண்டாடுமாறு வேண்டி கொண்டதை இந்தச் கான்ஸல் தவறு என்று சொல்லுகிறார். இத்தாலி இந்தியாவுடன் சிநேகமாயிருப்பதாக இவர் சொல்லுகிறார். எந்த வழியில் சிநேகம்? வியாபாரம் நடத்தி லாபம் சம்பாதித்துக் கொண்டு போவதைத் தவிர வேறு என்ன செய்திருக்கிறது? இந்திய சுய ஆட்சியைச் சிறிதளவாவது ஆதரித்திருக்கிறதா? பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முறையின் கொடுமைகளைச் சிறிதாவது கண்டித்திருக்கிறதா? ஒன்றுமில்லை. இத்தாலி நாகரீக விதிகள் எல்லாவற்றையும் மீறியிருக்கிறது. கண்ணியமுள்ள எந்த தேசமும் இதை மதிக்காது. இத்தாலியர் நாகரிகத்தைப் பரப்பப்போவதாயும் அபிஸீனியர்கள் இவர்களை வரவேற்பதாயும் கூறியிருக்கிறார். அம்மாதிரித் தேசத் துரோகிகள் எங்குமிருக்கிறார்கள். அன்னிய ஆட்சியை வரவேற்கும் மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது நமக்குத் தெரியும்; இப்படிப்பட்ட நாகரீகம் நமக்கு வேண்டாம். ஆத்ம ஞானத்தைப் போதிக்கப்போவதாக இவர்கள் சொல்லுவது கடவுளை அவமதிப்பதாகும். இங்கிலாந்து சர்வதேச சங்கத்தில் அனுஷ்டித்து வந்த கொள்கை மிகக் கேவலமான வேஷமாகும்.

இங்கிலாந்து விரும்பியிருந்தால் யுத்தத்தைத் தடுத்திருக்க முடியும். இங்கிலாந்தை மீறி எதிர்த்து இத்தாலி யுத்தம் செய்திராது. சூயஸ் கால்வாயை மூடியிருந்தால் யுத்தம் நின்றிருக்கும். இதையும் செய்யவில்லை. சர்வதேச சங்கம் உதவியளிக்குமென்று அபிசீனியாவுக்கு நம்பிக்கையளித்து ஏமாற்றியிருக்கக் கூடாது. முன்பு ஐரோப்பிய யுத்தத்தில் இங்கிலாந்து சேர்ந்துகொண்டது பெல்ஜியத்திற்கு உதவியளிப்பதற்காகவல்லத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவே. அபிசீனியாவும் பெல்ஜியமல்ல. அது ஆப்பிரிக்காவிலுள்ள கறுப்புத் தேசம். எண்ணெய் நிர்ப்பந்தம் ஏற்படுத்த யோசனை கூறிக்கொண்டே பிரிட்டன் இத்தாலிக்கு எண்ணெய் விற்று வந்தது. சூயஸ் கால்வாயின் லாபம் பிரிட்டிஷாருக்கும், பிரான்ஸிற்குமே போகும். பிரான்ஸ் இத்தாலிக்கு விரோதமாகப் போகத் துணியாது. சர்வதேச சங்கம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் அது தோற்றுப் போய்விட்டது. இது பெல்நாட்டு நாகரிகத்தின் அந்திம காலமாகும். இதனை பயனாக நமது வேலை இன்னும் கொஞ்சம் கஷ்டமாகும். இந்த யுத்தத்திலிருந்து நாம் ஒரு படிப்பினை பெற்றிருக்கிறது. ஆயுதபலத்தை உபயோகிப்பதில் நியாயம் கட்சிக்கு வெற்றியேற்படவில்லை. நமது பலாத்காரமற்ற முறை அப்படியல்ல. இதில் ஸத்தியமே ஜெயிக்கும். நாம் எதியோப்பியர்களுக்கு நமது அனுதாபத்தைத்தான் தெரிவிக்க முடியும். எதியோப்பிய சக்கரவர்த்தி தேசத்தை விட்டுவாராமல் அங்கேயே இறந்திருந்தால் நான் அதை இன்னும் மேலாகக் கருதுவேன். ஆனால் இதில் அவர் பிறர் யோசனையைக் கேட்டு நடந்திருப்பதாகத் தோன்றுகிறது. அவரை அழைத்துச்செல்ல எல்லா ஏற்பாடுகளும் தயாராயிருந்தன. குழந்தை அப்பா குதிரில் இல்லை என்பது போல் பிரிட்டிஷார் அவருக்கு யோசனை கூறவில்லையென்று மறுக்கப்படுகிறது. நாம் ஒடுக்கப்பட்ட தேசங்களின் சங்கமொன்றை அமைப்போம். ஏகாதிபத்திய முறையை எதிர்த்து ஒழிப்போம். கூடிய சீக்கிரத்தில் நமது விடுதலை பெறும்காலம் வரும். ஐரோப்பாவில் கோரயுத்தம் ஒன்று வரும்போல் தோன்றுகிறது. அப்போது மீண்டும் எதியோப்பியா சுயேச்சை பெறும். சர்வதேச சங்கத்தால் ஒரு பலனுமில்லை. அதைக் கலைத்துவிடலாம். இந்தியா அதற்கு அதிகப் பணம் கொடுத்துவருகிறது. அதிலிருந்து விலகிக்கொண்டு விடுமாறு இந்தியா சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கவர்ன்மெண்டாரும் அதையேற்று நடப்பார்களென்று நம்புகிறேன்.

# ஸ்தானிகருக்கு ஜவஹர்லால் இறுத்த பதில்.

## 'சுரண்டும் நோக்கத்தோடு செல்லும் ஏகாதிபத்திய வாசிகள்"

### தாய்நாட்டின் அன்பே ஏகாதிபத்தியத்தை எதிர்க்கச் செய்கின்றது.

அலகபாத் மே 8

மே 9-ந் தேதி "அடிஸ் அபாபா தினம்" கொண்டாடப்படவேண்டுமென்று காங்கிரஸ் தலைவரான பண்டித ஜவஹர்லால் வேண்டுகோள் விடுத்ததை அதைப் பரிகசித்துக் கல்கத்தாவிலுள்ள இத்தாலிய ஸ்தானிகர் அறிக்கை யைவிடுத்தார். அதற்குப் பதிலாக பண்டித ஜவஹர்லால் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்:-

அடிஸ்அபாபா தினத்தைக் கொண்டாட வேண்டுமென்று நான் விடுத்த வேண்டுகோளைக் கல்கத்தாவிலுள்ள இத்தாலிய ஸ்தானிகர் கண்டித்திருக்கிறார்.

இத்தாலியிடமும் இத்தாலிய மக்களிடமும் எங்களுக்கு யாதொரு குறையும் கிடையாது. எங்களிடம் இத்தாலியர் காட்டிவந்த நட்புறவுக்கு நாங்கள் எப்போதும் நன்றியுள்ளவர்களாகவிருப்போம். சிறுபிராயமுதல் நான் இத்தாலியை நேசித்து வந்திருக்கின்றேன். சித்திரக்கலையிலும் இயற்கையழகிலும் உயர்ந்த இத்தாலி என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதால் அதன் சரித்திரத்தை நான் படித்தேன். இத்தாலியின் சுதந்திரப் போராட்டம் என் மனத்தில் ஊக்கத்தை உண்டு பண்ணியது. பிளாரென்ஸ், வெனிஸ், நேபிள்ஸ் முதலிய நகரங்களின் சௌந்தர்யத்தில் நான் ஈடுபட்டிருக்கிறேன்.

இவ்வாறு நாங்கள் நேசிப்பதற்கு, ஏகாதிபத்தியத்தையும் பாஸிஸ்டு வாதத்தையும் நாங்கள் எதிர்ப்பதற்கும் சம்பந்தம் கிடையாது. இந்தியராகிய நாங்கள் எங்கள் தாய்நாட்டை நேசிக்கிறோம்.

ஆனால் அதற்காக எங்களையாளும் ஏகாதிபத்தியத்தையும் அதன் சாதனங்களையும் நாங்கள் அங்கீகரிக்கவில்லை. தாய்நாட்டின் அன்பே ஏகாதிபத்திய வாதத்தை எதிர்க்கும்படி எங்களைத் தூண்டுகிறது. நாட்டின் விடுதலையை நாங்கள் கோருகிறோம். ஏகாதிபத்யம் எங்கு தோன்றினும் சுதந்திரப்போரைத் தடைசெய்யுமாதலால் அதை நாங்கள் எதிர்த்தாகவேண்டியதிருக்கிறது சுரண்டும் நோக்கம்

எதியோப்பியர் யாரென்றும் அவர்களுக்கும் இந்தியருக்கும் என்ன சம்பந்தமென்றும் சிலர் கேட்கிறார்கள். வாளையும் தீயையும் கொண்டு இத்தாலியர் அடக்கியமக்களே அபிஸீனியர் என்பதை நான் அறிவேன். அம்மக்களிடம் ஒற்றுமையின்மை போன்ற பல குறைகளிருக்கலாம். இந்தியாவைப்போல் அங்கேயும் ஏகாதிபத்ய வாதம் பிளவையே உண்டுபண்ணும் ஜீவகாருண்யத்தை முன்னிட்டாவது நாகரிகத்தைப் பரப்புவதற்காவது இத்தாலியர் அபிஸீனியாவுக்குப் போகவில்லையென்று மாத்திரம் நான் உறுதியாகச் சொல்லுவேன். சுரண்டும் நோக்கத்துடனேயே ஏகாதிபத்திய வாதிகள் போகிறார்கள்; தங்குகிறார்கள் அவர்களுக்குட்பட்டமக்கள் பொருளாதார, ஆத்மார்த்திக முன்னேற்றங்களில்லாமல் தவிக்கிறார்கள். அக்னித்திராவகமும் விஷ வாயுக்களும் அபிஸீனியாவில் இத்தாலிய ஏகாதிபத்திய வாதத்தின் சாதனங்களாக வைமைந்தன. இத்தாலியர் கொண்டுவரப்போகும் "நாகரீக"த்திற்கு இவையிரண்டும் முன்னறிகுறிகளாகும். அபிஸீனியாவின் ஆன்மீக முன்னேற்றம் இவ்வாறு நசுக்கப்படுவதை இந்தியராகிய நாங்கள் சகித்துக்கொண்டு வாளாவிருக்க முடியாது. ஏகாதிபத்தியவாதம் தன் கொடுமைகளை நிகழ்த்திவருடபோது எப்படிச் சகித்துக்கொண்டிருப்பது?

ஆகவே அபிஸீனியருக்கு நம் அனுதாபத்தைத் தெரிவிக்கும்படி நான் இந்தியமக்களை மறுபடியும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## ஸேர். ராதாகிருஷ்ணன் சொற்பெருக்கு

1-ம் பக்கத் தொடர்.

மன சமூகத்தினுடைய - உலகத்தினுடைய - அபிவிருத்தியைக் கருதி ராமகிருஷ்ணர் பிரசாரஞ் செய்தார். அன்பை அடிப்படையாகக் கொண்டு உபதேசஞ் செய்தார். பிறருக்கு நன்மை செய்யவேண்டுமென்ற எண்ணமும் சகிப்புத்தன்மையும் ஒவ்வொருவரிடமும் ஏற்படவேண்டும். எந்தவகையில் எந்தவழியில் என்ன பெயரைச் சொல்லிக் கடவுளைப் பிரார்த்தித்தாலும் பாதகமில்லை. கடவுள் குறிப்பிட்ட ஜாதிமதத்தினருக்கு மாத்திரம் பாத்தியப்பட்டவரல்லர். எனவே, சர்வ மதஸ்தர்களுக்குள்ளும் ஒற்றுமையும் அன்பும் ஏற்படத்தான் ராமகிருஷ்ணர் பாடுபட்டார்.

## சுகாதார நிர்வாகசபை

1936 - 37 ம் ஆண்டிக்குரிய சுகாதார நிர்வாகசபையின் வரவு செலவுத் திட்டத்தில் பல புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள், மண்டபக் கரையிலும் ஏறக்குறைய 1,00,000 ரூபாச் செலவிற் பல திருத்தங்கள் செய்யப்படுமாம். இவற்றுள், முக்கியமானது, மண்டபத்தில் ஒரு பாடசாலையை நிறுவுதற்கு 11,825 ரூபாவும், மண்டபத்தில் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்துதற்காக 12,000 ரூபாவும் ஒதுக்கி வைக்கப்படுமாம்.


# யாழ்ப்பாணக் குடா நாட்டு வாசிகளுக்கு

## ஓர் சிறந்த சந்தர்ப்பம்

# அசானோ சிமேந்தை




வாங்குவோர்க்கு

ஒரு ஹெர்க்குயூல்ஸ்



ROBIN

# பைசிக்கிள் இனாம்.

அசானோ சிமேந்தே இங்கு விலைப்படும் சிமேந்துகளுக்குட் சிறந்தது. குணம், பலம், பாரம் ஆகியவற்றிற்கு உத்தரவாதம் பெற்றது.

இலங்கையிலுள்ள யூ. டீ. சீ.கள் முனிசிபாலிட்டிகள், இன்னும் ஏனைய பொது ஸ்தாபனங்கள் ஆதியனவற்றிற்கு உபயோகிக்கப்படுவது

விபரம்: துண்டுப்பத்திர விளம்பரத்திற் காண்க.

சோல் ஏஜெண்ட்ஸ்:—

ஹெயிலி & கென்னி

தபால் பெட்டி 70, கொழும்பு.

(M. 36.)

# யாழ்ப்பாணம் முழுவதும் மரவரி

## அரசாங்கசபையில் நடந்த ருசிகாமான விவாதம்

### தொழிலாளர் சங்கத் தலைவரது கண்டனம் தோல்வியுற்றது

கொழும்பு மே 13உ

இன்று பகல் 2-30 மணிக்கு தலைவர் கனம் திரு. டப்ளியு. துரைசாமி அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் அரசாங்கசபைக் கூட்டம் மறுபடியும் ஆரம்பமாயிற்று.

#### திரு. கொத்தலாவலைக்கு சரமாரியான கேள்விகள்

இன்று பல உபமான்னியப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டு நிறைவேறின. முதலாவதாக ரயில்வே வருவில் காணாமற்போய்விட்ட ஒரு தொகையைச் சரிக்கட்டுவதன் நிமித்தம் 417 ரூபாய் அனுமதிக்கப்பட வேண்டுமென்று போக்குவரத்து மந்திரி திரு. ஜே. எல். கொத்தலவலை ஓர் உபமான்னியப் பிரேரணையைக் கொண்டுவந்தார்.

மேற்படி பிரேரணை கொண்டுவரப்படுகையில் கன்னேசு-தெல்லிப்பழைப் பகுதி ரயில்வேயில் வசூலான தொகை எப்படிக் காணாமற்போயிற்றென்பதைப்பற்றி விபரம் கூற வேண்டுமெனப் போக்குவரத்துமந்திரிக்குச் சரமாரியான கேள்விகள் விடுக்கப்பட்டன.

இப் பிரேரணையைப் பல அங்கத்தவர்கள் எதிர்த்துப் பேசினர்களாயினும் பிரேரணை இறுதியில் நிறைவேறியது.

போக்குவரத்துமந்திரி மொத்தம் 14,000 ரூபாய்க்கு மற்றும் எட்டு உபமான்னியப் பிரேரணைகளைக் கொண்டுவந்தார். எல்லா உபமான்னியப் பிரேரணைகளும் நிறைவேற்றப்பட்டன ஆனால் அவைகளுள் ஒரு பிரேரணையைப்பற்றி மட்டில் சில குறிப்புகள் பிரஸ்தாபிக்கப்பட்டன. அதாவது மட்டக்களப்பு டிஷ்றிக் என்ஜினியர் காரியாலயத்தில் கடன்களைச் சரிக்கட்டுவதன் நிமித்தம் 2611 ரூபா அனுமதிக்கப்படவேண்டுமென்னும் உபமான்யப் பிரேரணை பிரேரிக்கப்படுகையில் திரு. ஜி. ஈ. டி சில்வா (கண்டி) சில விஷயங்களைக் குறிப்பிட்டார். எனினும் உபமான்யப் பிரேரணை நிறைவேறிவிட்டது. அதன்பின் பின்வரும் தீர்மானங்களை உள்நாட்டு மந்திரி சர். டி. பி. ஜயதிலகா பிரேரித்தார்:-

1934-ம் வருடம் டிசம்பர்மாதம் வலிகாமம் வட பகுதியில பரீக்ஷார்த்தமாக மரவரி விதிக்கப்பட்டது அப்பொழுது பரீக்ஷார்த்தமாக விதிக்கப்படும் இந்தவரி திருப்திகரமாக இருந்தால் அதை யாழ்ப்பாணத்திலும் கையாடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இப்பொழுது வலிகாமம் வடபகுதியில் கையாளப்பட்டுவரும் மரவரி திருப்திகரமாக இருக்கின்றதென்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயமே, ஆகையால் இதை யாழ்ப்பாணத்திலும் கையாளப்படவேண்டும்.

#### வரி விதிக்கும் முறை

நெடுந்தீவு எழுவைதீவு இவ்விரு இடங்களிலுமுள்ள ஆண் பனையிலிருந்து இறக்கப்படும் குறிப்பிட்ட ஒரு அளவுகள்ளுக்கு 50 சதம் விதமும் பெண்பனையிலிருந்து இறக்கப்படும் கள்ளுக்கு 1-50ரூபாய் விதமும் வரி விதிக்கவேண்டும்

கயிஞதீவு, பூநகரி இவ்விரு இடங்களிலும் மேற்படி இருவகை வரிகளும் முறையே 1-50 ரூபாவாகவும் 5ரூபாவாகவும் விதிக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணப்பிரிவின் இதரபாகங்களிலிருந்து இறக்கப்படும் கள்ளுக்கு மேற்படி இருவகை வரிகளும் முறையே 2-50 ரூபாவாகவும் 10 ரூபாவாகவும் விதிக்கப்படவேண்டும்

பனைமரங்களின் லைசென்ஸ் ஜனவரிமாதம் 1-ம் தேதியிலிருந்து டிசம்பர் 1-ம் தேதி வரையில் ஒரு வருடத்திற்கு வழங்கப்படும்.

தென்னை மரங்களின் வரி ஜூலை மாதம் 1-ம் தேதியிலிருந்து ஆரம்பித்து ஜூன் மாதம் 30-ம் தேதி வரையில் ஒரு வருடத்திற்குக் கொடுக்கப்படும்.

மரவரியை மன்னாரிலும் கையாளலாகாதென்று மன்னார்ப் பிரதிநிதி சபை முதல்வரை வினவினர். பிறகு பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் பேசியதாவது:-

#### திரு. பொன்னம்பலம்

இந்தப் பிரேரணையைக் கொண்டுவந்த சபை முதல்வருக்கு நான் எனது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஆனால் வெகு காலத்திற்கு முன்னமே கையாளப்பட்டிருக்கவேண்டிய இவ் விஷயம் காலதாமதம் செய்யப்பட்டு விட்டமை எனக்கு மிகுந்த விசனத்தைக் கொடுக்கின்றது. யாழ்ப்பாண பிரதேச வாசிகளிடையே மாவரி விஷயம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இருந்துவருகின்றது. இந்த விஷயத்தைப்பற்றி சில வருஷங்களுக்கு முன் சபையில் விவாதம் நடந்தபொழுது மாவரியின் மூலம் போதுமான வருமானங்கிடைக்குமென்று சிலர் சந்தேகித்தார்கள். ஆனால் அவர்களுடைய சந்தேகங்கள் ஆதாரமற்றவைகளென்பது இப்பொழுது நிதர்சனமாகத் தெரிந்துவிட்டது. உதாரணமாக மரவரி வலிகாமம் வட பகுதியில் பரீக்ஷார்த்தமாகக் கையாளப்பட்டுப் பார்க்கப்பட்டது. அதில் எவ்வளவு வருமானம் கிடைக்கக்கூடுமென்று எதிர்பார்க்கப்பட்டதோ அதைவிட அதிகமாகவே வருமானம் கிடைத்தது.

சபை முதல்வரின் பிரேரணை விருப்பத் தகுந்ததேயாயினும் அவர் குறிப்பிடும் வரிவிகிதம் ஒப்புக் கொள்ளக் கூடியதாக இல்லை. ஏனெனில் இந்த விகிதம் மிகவும் அதிகமாக இருக்கின்றது முதலாவதாக மரவரியைப் பற்றி யோசிக்கையில் அதன் மூலமாகக் கிடைக்கக் கூடிய வருமானத்தை நாம் மூலாதாரமாகக் கொண்டிருக்கலாகாது. மரவரியினால் தேசத்திற்கும் பொதுஜனங்களுக்கும் எவ்வளவு நன்மை ஏற்படக் கூடும் என்பதையே நாம் சிரத்தையுடன் கவனித்தல் வேண்டும்.

#### சென்னையில் மரவரி.

சென்னை மாகாணத்தில் பனை மரங்களுக்கு விதிக்கப்படும் வரி தென்னைகளுக்கு விதிக்கப்படும் வரியில் மூன்றிலொரு பாகமேயாகும். தவிர ஆண் பனை, பெண் பனை என்ற வேற்றுமைகளும் சென்னை மாகாணத்தில் கிடையாது. (சிரிப்பு)

இலங்கைக்கோ ஆண்பனைக்கு 1-50 ரூபாய் விதமும் பெண்பனைக்கு 5 ரூபாய் விதமும் வரி விதிக்கப்படவேண்டுமென்று கோரப்படுகின்றது. ஆண்பனையைக் காட்டிலும் இரண்டு பங்கு கள்ளை பெண் பனை கொடுப்பதாக வைத்துக் கொள்வோம் அப்படியிருந்தாலும் மேற்குறிப்பிட்ட வரி நியாயமானதல்ல. (சிரிப்பு) ஏனெனில ஆண் பனைக்கு 1-50 ரூபாய் வரியாயின் பெண் பனைக்கு 3 ரூபாய் வரியே இருத்தல் வேண்டும்.

அடுத்தாற் போல் காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. எஸ். நடேசன் மேற்படி பிரேரணையை ஆதரித்துப் பேசினர். அவ்வமயம் மரவரி பரீக்ஷார்த்தமாக கையாளப்பட்டதைப்பற்றி அவர் கூறியதாவது:—

மரவரியைப் பரீக்ஷார்த்தமாக அமுல் செய்வது பற்றி யோசனை செய்த பொழுது இளைஞர்களும் பள்ளிமாணவர்களும் குடிக்கத் தலைப்பட்டு விடுவார்களென்று அஞ்சப்பட்டது நான் கூட மரவரியினுல் இலங்கையில நடைபெறும் குற்றங்களுடைய தொகை அதிகரித்துவிடுமோ என்று முதலில பயந்தேன்.

ஆனால் பரீக்ஷார்த்தமாக நடந்த வேலைகள் எதிர்பார்க்கப்பட்டதைப் போல் தீமையை விளைக்காமல் திருப்திகரமாகவும் பாராட்டத் தகுந்த வகையிலும் நடந்திருக்கின்றன. ஆகையால் இது விஷயமாகப் பருத்தித்துறைப் பிரதிநிதி பேசியவைகளைப் பூரணமாக ஆமோதிக்கின்றேன்.

ஆனால், இரண்டு முக்கியமான விஷயங்களை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். அதாவது மாவரி பிரச்னை அதனால் பொது ஜனங்களுக்கு ஏற்படக் கூடிய நன்மைகளை ஆதாரமாகக் கொண்டு யோசிக்கப்படவேண்டுமேயன்றி அரசாங்கத்தாருக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தை மூலாதாரமாகக் கொண்டு விவாதிக்கப்படலாகாது. இரண்டாவதாக கருப்பநீர் இறக்குவதசம்பந்தமாகத் தற்சமயம் அமுலிலிருந்து வரும் கட்டுப்பாடுகளை உடனே ரத்துச் செய்து விடவேண்டும்.

#### முதலாவதாக எதிர்ப்பு

கண்டி அங்கத்தினர் திரு. ஜி. ஈ. டி. சில்வா இத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர். குடிகாரர்களுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்று கூறும் ஒரு கோஷ்டியுடன் சேர்ந்து கொள்ள நான் விரும்பவில்லை. இப்பிரச்னையை யார் தீர்க்கப் போகிறார்களென்பதையறிய விரும்புகிறேன்.

('நீங்கள், தான் என்று ஓர் சப்தம் கிளம்பிற்று.)

இல்லை, நான் இந்த வேலையை ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஆண் பனைக்கும் பெண் பனைக்கும் வித்தியாசமிருக்கிறது. குடிக்கவேண்டுமெனபது சரியான கொள்கையல்ல. அதிகமாகக் குடிப்பதைத் தடுக்க வேண்டும். குடிக்கும் ஜனங்களே இந்தத் திட்டத்தை ஆதரிக்கவில்லை

#### ஆதரிக்க வேண்டும்

யாழ்ப்பாணம் அங்கத்தினர் திரு மகாதேவா பேசியதாவது:—

சபைமுதல்வர் இத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததை நான் மிகவும் பாராட்டுகிறேன். இதில காலதாமதமேற்பட்டதைப்பற்றி நான் மிகவும் வருத்தப்படுகிறேன். கண்டி அங்கத்தினர் தவிர மற்றெல்லோரும் இதை ஆதரிப்பார்கள் என நன் நம்புகிறேன்.

மன்னார்த்தொகுதி அங்கத்தினர் ஸ்ரீபத்மநாதன் பேசியதாவது:—

நெடுந்தீவு வாசிகள், இலவசமாகக் கள் இறக்குவதே வழக்கம். கள் தங்கு சேர்க்கப்பட்டதாலேயே இத்தீவு வாசிகள் நல்ல நிலைமையிலிருந்து வருகிறார்கள். கடைசி நேரத்தில், நெடுந்தீவு வாசிகள் வரி செலுத்த வேண்டுமென ஏற்படுவதைப் பார்க்க நான் மிகவும் வருத்தப்படுகிறேன். நெடுந்தீவு வாசிகளும யாழ்ப்பாண வாசிகளும் இலவசமாகக் கள் இறக்க வேண்டிய பிரச்னையை மந்திரி புனராலோசனை செய்வாரென நான் நம்புகிறேன். மற்றப்பகுதிகளுக்கும் வரியில் சிறிது குறைக்கப்பட வேண்டும்.

#### கொள்கை மாறுதல்

சுவான்வளை அங்கத்தினர் டாக்டர் என். எம். பெரைரா பேசுகையில் சபை முதல்வர் தம்முடைய மிதக்குடிப் பிரசாரக் கொள்கையை மாற்றிக் கொண்டது தமக்கு மிகுந்த திருப்தியைக் கொடுக்கிறதென்றும் வடபகுதியில், அவர் தம்முடைய கொள்கையை மாற்றிக் கொண்டாரென்றும் களனியாவிலும் அவர் அவ்விதம் செய்வாரெனத் தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

திரிகோணமலை அங்கத்தினர் திரு தம்பிமுத்து பேசியதாவது:—

இந்தத் திட்டம் என்னுடைய தொகுதியிலும் மற்ற இடங்களிலும் அமுலுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென நான் உணருகிறேன் இக்கியாசியிலுள்ள விலை விகிதம் எனக்குத் தெரியாது. ஆனால் இலங்கையில் போத்தல் 20 சதமாக விற்கப்படுகிறது.

இதுசமயம் சபை தேநீர் இடைவேளைக்காகக் கலைந்தது.

#### இடைவேளைக்குப் பின்

திரு தம்பிமுத்து தொடர்ந்துபேசினர். அதன் பின்னர் திரு. பொன்னம்பலம் இந்த விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று வாதாடினர். பின்னர் ஜி. ஈ. டி. சில்வா முதலிய சிலர் குடியை ஒழிப்பது பற்றிப் பேசித்தீர்மானத்தைஎதிர்த்துப் பேசினர்கள். எல்லோருக்கும் பதிலளிக்கு முகத்தான் கனம் மந்திரி எழுந்து 1935-ம் வருடம் செப்டம்பர் மாதம் 23-ந் திகதி யாழ்ப்பாணத்தில் கூடிய மகாநாட்டுத் தீர்மானமும் மற்றும் யாழ்ப்பாணப் பிரமுகர்களது யோசனையும் தமது தீர்மானத்துக்கு அனுசரணையாக இருக்கின்றன என்று குறிப்பிட்டார். பின்னர்க் குடியை ஒழிப்பதற்கு சட்டபூர்வமான முறை சரியன்று என்றும் குடியால் விளையும் தீமைகளைப் பற்றிப் பிரசாரமும், போதனையும், தனிப்பட்டவர்களது முயற்சியுமே அதை ஒழிக்க முடியுமென்றும், தாம் பூரண மதுவிலக்கை ஆதரிப்பதாகவும கூறினர்.

பிரேரணை வோட்டுக்கு விடப்பட்டதில் 42 பேர் சாதகமாக வோட் செய்யவே பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

உள்நாட்டு மந்திரி ஸர். பர்ஞ ஜயதிலகா கொண்டுவந்த அடுத்த தீர்மானத்துக்குப் பலத்த எதிர்ப்பு ஓயாத வாதங்களும் நிகழ்ந்தன. தீர்மானம் என்னவெனில் யாழ்ப்பாணப் பகுதியில் வலிகாமம் வடக்கிற்கு மாவரி வசூல் செய்யும் பகுதிக்குப் புதிதாகப் பயிற்சி செய்த சிலரை நிரந்தரமாக்குவதற்கு ரூ 13,500 உபமான்யம்வேண்டுமென்பதே. இந்தச் சந்தர்ப்பத்திலேயே தீர்மானத்தில் கண்ட சிலர் தவிர நான்கு பேர் அதிகப்படி பயிற்சிபெற அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் கூறிக்கப்பட்டிருந்தது

இதைக்குறித்து திரு அலுவிகாராவும் திரு பொன்னம்பலமும் மிகவும் கண்டித்துப் பேசினர்கள். இம்மாதிரி ஒரே தலைப்பின்கீழ் இரண்டு மூன்று பிரிவுகளின்கீழ் செலவு கோருவது சரியல்லவென திரு அலுவிகாரா கூறினர். திரு பொன்னம்பலம் இம்மாதிரி ஏற்பாடுகள் செய்வதன் அவசியமே ஏற்படவில்லை என்று கூறினர். திரு மகாதேவா நிலைமையைத் தெளிவுபடுத்தி இரண்டொருவார்த்தைகள் பேசினர்.

கடைசியாக திரு அலுவிகாரா மேற்படி செலவில் மொத்தமாக 1,290 ரூபாய் குறைக்கவேண்டுமென்று ஒரு திருத்தம் கொண்டுவந்தார். திருத்தம் வோட்டுக்கு விடப்பட்டபோது தோல்வியுற்றது முடிவில் கனம் மந்திரி கொண்டுவந்த பிரேரணை யாதொரு திருத்தமுமின்றி அப்படியே நிறைவேற்றப்பட்டது

பின்னர்ப் பொக்கிஷக்காரியதரிசி கொண்டுவந்த சில உபமான்யங்கள அனுமதிக்கப்பட்டன.

அதன் பின்னர் இலங்கையில் யுத்தப்பயிற்சி அளிப்பதற்கென வெளிநாட்டினர்களை நியமனம் செய்வதற்கென 5,396 ரூபாய் உபமான்யம் வேண்டுமென்று பொக்கிஷகாரியதரிசி கோரினர். இதை எதிர்த்து என். எம். பெரேராவும் அவிசாவளைப் பிரதிநிதி திரு. டி. பி. ஆர். குணவர்த்தனவும் நீண்டநேரம் பேசினர். பின்னவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இலங்கையில் எத்தனையோ பேர் இல்லையா? வெளிநாட்டிலிருந்து இந்தப் பயிற்சிக்கு என்று அழைப்பது ஏகாதிபத்தியக் கொள்கைக்குதாமும் துணை செய்வதாகும் நண்பர்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. அதாவது வருங்காலத்தில் இதே வெளி நாட்டார்களை சண்டைபோட்டு இலங்கையர் விரட்டவேண்டியிருக்கும், ஆகலால் தற்பொழுதே இலங்கையிலுள்ளவர்களையே பயன்படுத்திக்கொள்வதே நலம்" ஆனல் தீர்மானம் வோட்டுக்குவிடப்பட்டதும் இந்த இரண்டு அங்கத்தவர்களே எதிர்த்தனர். ஆகவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் விவசாய மந்திரி கனம் சேனநாயகா நீர்ப்பாசன இலாக்கா ஆராய்ச்சி என்ஜினியர் ஒருவர் இலங்கையரல்லாதவரை நியமனம் செய்வதற்கென்று சுமார் 500 பவுன் செலவு அனுமதிக்கப்படவேண்டுமென்று பிரேரணை கொண்டுவந்தார். இதை எதிர்த்து திரு குணசிங்க பேசிக்கொண்டிருந்தார். மணி 7-30 ஆகிவிட்டபடியால் சபைக் கூட்டம் அத்துடன் அடுத்தநாளைக்குப் பின் போடப்பட்டது.

கொழும்பு, மே 14உ

இன்று பிற்பகல் 2-30-மணிக்குத் தலைவர் திரு. வை. துரைசுவாமி அவர்களின் தலைமையின்கீழ் அரசாங்கசபையின மூன்றும்நாட் கூட்டம் ஆரம்பமாயிற்று, பல மனுக்களும் பிரேரணை அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

#### நீர்ப்பாசன என்ஜினியர்

விவசாயப்பகுதி நீர்ப்பாசன விஷயங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை நடத்தத் தகுந்த ஒரு என்ஜினியரை நியமனஞ் செய்ய வேண்டுமென்றும் அந்தஎன்ஜினியர் அயல் நாடுகளிற் பயிற்சி பெற்றவராக இருத்தல் வேண்டுமென்றும் விவசாய மந்திரி திரு. டி. எஸ். சேனநாயகா கொண்டுவந்த பிரேரணையைப் பற்றிய விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

மன்னார் முல்லைத்தீவுப்பகுதிகளிலுள்ள குளங்களின் நிலைமையை மன்னார்ப் பிரதிநிதி திரு. ஸ்ரீபத்மநாதன் விவசாய மந்திரிக்கு எடுத்துக் காட்டினர். இது சம்பந்தமாக விவாதம் நடந்தபின், இடைவேளைக்காகக் கூட்டம் கலைந்தது.

மீண்டும் கூட்டம் கூடியதும், திரு. ஏ. ஈ. குணசிங்கா பின்வரும் தீர்மானத்தைப் பிரேரித்தார்:—

"வளத்தமுல்லையில் 8 ஏக்கர் நிலத்தை அதிலிருக்கும் ஏழை மக்களைக் குடும்பத்துடன் விரட்டிவிட்டு, கிறிக்கெட் விளையாடும் சங்கத்துக்குக் கொடுத்ததற்காக விவசாய மந்திரியை இச்சபை கண்டிக்கின்றது. இவ்விதமாக மந்திரியார் நிலத்தைக் கொடுத்தல் கூடாது. ஆதலால் அதை நீக்கிவிடவேண்டுமென்று இச்சபை கேட்கின்றது."

இத்தீர்மானம் சம்பந்தமாகப் பலத்த விவாதம் நடந்தபின் சபையாரின் சம்மதத்திற்குவிடப்பட்டபோது, தீர்மானம் தோல்வியுற்றது.

வேறும் சில தீர்மானங்கள் விவாதிக்கப்பட்ட பின், மாலை 7. 30 மணியளவில் கூட்டம் அடுத்தநாளைக்குப் பின் போடப்பட்டது.

கொழும்பு, மே 15உ

இன்று பிற்பகல் 2. 30 மணிக்குத் தலைவர் திரு. வை. துரைசாமி அவர்களின் தலைமையின்கீழ் மீண்டும் அரசாங்கசபைக் கூட்டம் ஆரம்பமாயிற்று. இக்கூட்டத்தில் மூன்று வருஷ ஒப்பந்தத்தின் பேரில் ஆறு கட்டிட என்ஜினியர்களை அயல் நாட்டிலிருந்து தருவிக்கவேண்டு மென்று நேற்றைய கூட்டத்தில் விவசாய மந்திரி திரு சேனநாயகாவால் பிரேரிக்கப்பட்ட பிரேரணை மீது மீண்டும் தொடர்ந்து விவாதம் நடைபெற்றது.

விவாதத்தின்போது, இந்த என்ஜினியர்கள் இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்படுதல் கூடாதென்றும், இந்தியாவிலிருந்து தருவிக்கப்படுதலே நல்லது என்றும் எடுத்துக்காட்டப்பட்டது.

ஈற்றில், இத்[illegible] சபையாரின் சம்மதத்திற்கு விடப்பட்டபோது, 28 பேர் சாதகமாகவும் 6 பேர் பாதகமாகவும் வாக்களித்தனர். எனவே தீர்மானம் நிறைவேறியது.

அதன் பின்னர், ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. பண்டாரநாயகா கொண்டுவந்த சில சட்டங்கள் முதன் முறையாக வாசித்துச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டன.

மாலை 6 மணியளவில் அரசாங்க சபைக் கூட்டம் கலைந்தது. இது ஞானவும் இம்மாதம் 26 ந் திகதி கூடும்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுவஸ்
வைகாசி மீ ௫உ திங்கட்கிழமை

## யாழ்ப்பாணத்தில் இனி மதுமயமா?

ஒரு காலத்தில் மதுபானத்தை அறவேயொழித்தது இந்த யாழ்ப்பாணமாகும். அப்படிப்பட்ட யாழ்ப்பாணத்தில் இப்பொழுது மதுபானம் மிகவும் விருத்தியடைந்து வரலாயிற்று. இதுகாலம் யாழ்ப்பாணத்திலே இடங்கள் தோறும் தவறணைகள் எனப்படும் மதுக் கடைகளை வைத்து அம் மதுக்கடைகள் வாயிலாக ஒரு பகுதியார்தான் கள்ளைக் குடித்து வந்தனர். இந்த மதுக் கடைகளை வைப்பதும் தவிர்படதும் ஊரவர் சம்மதத்தைப் பொறுத்திருந்தன. இம் மதுபானங் காரணமாக யாழ்ப்பாணத்திற் கொலை முதலிய தீமைகளும் குற்றங்களும் அதிகப் படலாயின என்பது எல்லாரும் அறிந்த இரகசியம். மாகாணத் தலைவர் பொலிஸ் தலைவர் முதலாம் அதிகாரிகள் வருடந் தோறும் வெளியிடும் பரிபாலன அறிக்கைப் பத்திரங்கள் வாயிலாகவும் இங்கே கொலை முதலாங் குற்றங்கள் அதிகப்படுதலை அறியலாகும்.

இது இப்படியிருக்க, அரசினர் மரவரி வைத்துக் கள்ளுச் சேர்க்கும் முறையைப் பரீட்சார்த்தமாக முதன் முதல் வலிகாமம் வடக்கில் வைத்துப் பார்த்தனர். அதனால் வருவாய் அதிகப்படலாயிற்று. அதாவது வலிகாமம் வடக்கிலிருந்த நான்கு கள்ளுக் கடைகள் வாயிலாக ஒரு வருட காலத்தில் வந்த வருவாய் 40000 ரூபா; அந்தப் பகுதியில் மரவரியைக் கைக்கொண்டமையினாற் சென்ற வருடம் வந்த வருவாய் 66275 ரூபா; 26275 ரூபா மேலதிகமான வருவாய் வரப்பெற்ற அரசினர் இந்த மரவரிமுறையை நீர்வகிப்பதற்கு பின்நிற்பாரா? கள்ளு விற்று வந்த பணம் வேறிக்குமா என்பது தான் எங்கள் அதிகாரிகளின் நியாயம்; இதற்கு வடமாகாணத்திலிருந்து போயிருக்கும் அரசாங்கசபைப் பிரதிநிதிகளும் பூரணசம்மதமாய் நிற்கின்றனர்; காரணம் வேறொன்றுமன்று இவர்கள் இனிமேலும் அரசாங்க சபைப் பிரதிநிதிகளாய் வருதற்கு முற்பட்டு நிற்குஞ் சமயங்களில் மரமேறிகளும் மதுபானம் விற்போர் மதுபானத்தை அபிமானிப்போர் எல்லாரும் அபேட்சகளாயதங்கட்குச் சார்பாக நிற்பரென்ற நம்பிக்கையாகும்; இதுவன்றி நமது சனப்பிரதிநிதிகள் மரவரிமுறையால் யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கும், வரவிருக்கும் தீமையை அறியாமையினாலல்ல.

தவறணைமுறையைக் காட்டிலும் மரவரிமுறை பன்மடங்கு அபாயகரமானது. தவறணைகளில் எல்லாரும் போய்க் கள்ளுக்குடிக்கமாட்டார்கள்; மேலும் தவறணைகளைச் சனச் சம்மதம் பெற்றுத் தவிர்த்தல் முடியும்; தவறணைகளிற் கள விற்பதற்கு நேரக் கட்டுப்பாடு உண்டு; மரவரி முறையினாலே கள்ளுச்சேர்க்கப்படும் ஒவ்வொரு பனைமரத்தின் அடியிலுள்ள தானமும் ஒவ்வொரு தவறணையாகின்றது; ஆண் பெண் சிறுவர் சிறுமியர் என்ற [illegible]தம் பாராமல் எவரும் இரக[illegible]வும் வெளிப்படையாகவும் மதுபானம் அருந்தலாகும்; இனி இதற்குப் பேரளவில் நேரக் கட்டுப்பாடு இருந்தாலும் உண்மையில் எந்த நேரமும் கள்ளுவாங்கிக் குடித்தல் முடியும். பள்ளிக்கூடச் சிறுவரும் இக்கொடிய மதுபானத்தைப் பழகிக் கெட்டுப்போவரேயெனச் சிங்களப் பிரதிநிதிகள் பயந்து கூறியது பொய்யாகமாட்டாது.

இனி, இந்த மரவரிமுறை யாழ்ப்பாணம் ஒன்றிற்கேயுரியதாம். இலங்கையின் ஏனைய மாகாணங்களில் இந்த அக்கிரமம் இல்லையாகும். இலங்கையின் ஏனையபாகங்களிற் கைத்தொழில் கமத்தொழில் வியாபாரம் முதலியன விருத்தியாக, இவைகளை விருத்திசெய்து ஊரவர் நல்ல நிலைமையடைதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய இந்த யாழ்ப்பாணத்திலமாத்திரம் இவைகளொன்றுமில்லாதுபோக மதுபான விருத்தியொன்றையே அரசினரும் அரசினரிலும் மோசமாக சனப்பிரதிநிதிகளைச் சென்ற முழுமக்களும் செய்யத்தலைப்பட்டுக்கொண்டனர். எப்படிச் சீனதேசத்தில் அந்நியர் அபினைகொண்டுபோய்ப் புகுத்தியமையினால் அந்தப் புராதன நாட்டிற்குக் கேடு ஏற்படலாயிற்றோ, அப்படியே இவர்கள் இக்கொடிய மதுபானத்தைப் புகுத்தியமையினால் யாழ்ப்பாணத்திற்குத் தீமை வருவது நிசமாகும். இதனை நாம் இன்னுஞ் சில காலத்தில் நேரே பார்த்துக் கொள்ளலாகும்.

## உருஷிய - ஜப்பானிய உறவுக்கு ஆபத்து

ஜப்பானியர் தாம் உலக சமாதானத்தையே இலக்காகக்கொண்டு உழைத்து வருவதாகக் கூறினர்கள். இப்போதோ, ஜப்பானிய அந்நியநாட்டு மந்திரி, "நாம் கைத்தொழில்செய்யும் பொருள்களுக்கு வேண்டிய ஆதாரப் பொருள்களும் அப்பொருள்களை விற்பதற்கு இடமும் கிடையாவிடின், நமது பொருளாதார வாழ்வு செவ்வனே நடைபெறாது. ஆதலின், நமது பொருளாதார நிலையைப் பாதிக்கக்கூடிய கட்டுப்பாடு பாதுகாப்பு ஆதியனவற்றைப் பிறர் ஏற்படுத்துவதை நாம் சமாதானமான முறையிற் தடுப்போம். நமது முயற்சியால் அது நிறைவேறுதாயின, நாம் அவசியமான முறைகளைக் கையாட நேரிடும்" என்று சிறிது பரபரப்புடன் கூறுகின்றார். ஜப்பானிய யுத்தமந்திரியாகிய ஜெனரல் டரக்கி என்பார், "உருஷியர் நம்மைத் தாக்குவதையே நோக்கமாகக்கொண்டு மஞ்சுகோ எல்லைபுறத்தில் கோட்டைகளைக் கட்டுகின்றனர். அரக்கிழ்ப் பிரதேசத்தில் 2,00,000 யுத்தவீரரைக் கொண்ட படையை வைத்திருக்கின்றனர். இன்னும் இப்படையை அவர்கள் அதிகரிக்கச்செய்தல் கூடும். விளாடிவாஸ் என்னுங் கப்பல் ஸ்தலத்தில் மாத்திரம் அவர்கள் 50 நீர்மூழ்கிக் கப்பல்களை வைத்திருக்கின்றனர். அன்றியும் ஜப்பானிய நகரங்களைத் தாக்கப் போதுமான விமானங்களும் அவர்களிடத்திலுள்ளன. வெளிமங்கோலியா அவர்கள் ஆதிக்கத்திலேயே இருக்கிறது. இவற்றால் ஜப்பான் மஞ்சூரியாவில் பெரிய படையை வைத்திருக்கவேண்டியிருக்கிறது" என்று உருஷிய ஜப்பான் உறவுக்கு ஏற்படக்கூடிய ஆபத்திற்கு நியாயங் காட்டுகின்றார். அடுத்த மாதம் முதலாந் திகதி தொடக்கம் ஜப்பானுக்கும் மஞ்சுகோவுக்குமிடையே ஒரு புதிய உடன்படிக்கை கையாளப்படுமாம். அவ்வுடன்படிக்கையின்படி உலகில் நாகரிகமுற்றனவாகக் கருதப்படும் நாடுகளுக்கு மஞ்சுகோவும் சமமாகுமென்பதை ஜப்பான் அங்கீகரிக்கும் என்றும் ஜப்பான் மஞ்சுகோவில் தனக்குள்ள விசேஷ உரிமைகளைத் துறந்துவிடும் என்றும் அறியக்கிடக்கின்றது. இதிலிருந்து என்ன புலனாகின்றது? மஞ்சுகோவைத் தனிப்பட்ட சுதந்திர நாடு என்று அங்கீகரித்துவிடின், ஏனைய தேசங்களும் அதனை அவ்வாறே அங்கீகரிக்குமென்றும் அங்ஙனம் அங்கீகரிப்பின் உருஷியரின் ஆக்கிரமிப்பைத் தடுத்தற்குப் பல தேசங்கள் உதவிக்கு வருதல்கூடும் என்றும் ஜப்பான் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. இவ்வாறு எதிர்பார்த்தபடி ஏனைய தேசங்கள் உதவிக்குவாராவிடினும் ஜப்பான் தானே மஞ்சுகோவிற்குத் துணையாக நின்று உருஷியாவைக் கண்டித்து எச்சரிக்கை செய்ய முற்படும் என்பதும் தெளிவாகின்றது.

உருஷிய சோவியத் அரசினர் தமது படைகளைப் பலப்படுத்தி வருதல் இதரதேசங்களின் சமாதானத்திற்குப் பங்கம் விளைப்பதாகும் என்பது ஜப்பானிய அந்நியநாட்டுமந்திரியின் கூற்றாகும். இதினின்று இதரதேசங்களது சமாதானத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு தனக்கே உரியது என்று ஜப்பான் கருதுகின்றது என்பது வெளிப்படை. இப் பொறுப்பை ஜப்பான் தானாகத் தன் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டமையாலேயே உருஷியா தனது படையை அதிகரிக்கச்செய்து வருகின்றது என்று கருதுவாருமுளர். மேலைத்தேசங்களில் எவ்வாறு பிரான்சும் ஜெர்மனியும் ஒன்றன்மேல் ஒன்று அவநம்பிக்கை கொண்டிருக்கின்றனவோ அவ்வாறே கீழைத்தேசங்களிலும் உருஷியாவும் ஜப்பானும் ஒன்றன்மேல் ஒன்று பலத்த அவநம்பிக்கை கொண்டிருக்கின்றன. சென்ற வருடமே, மங்கோலியாவிற்குள் உருஷியப் படைகள் நின்று முழக்கிய முழக்கத்திலிருந்து இந்த இருநாடுகளுக்குமிடையே யுத்தம் ஏற்படக்கூடுமோ என்ற அச்சம் பலருக்கும் உண்டாயிற்று. ஆயின அந்நிலைமை தந்திரமாக நீக்கப்பட்டது. அன்று தொடக்கம் ஜப்பானும் ஜெர்மனியோடு நட்புச்செய்து கொண்டு உருஷியாவுக்குக் கஷ்டத்தை உண்டுபண்ணி வருகின்றது.

எனவே, உருஷியாவுக்கும் ஜப்பானுக்குமிடையே எவ்வாற்றானும் நட்புக்குரிய அறிகுறிகளைக் காணவில்லை. உருஷிய ஜப்பானிய யுத்தம் ஒன்று தொடங்குமாயின், அதில் உருஷியா வெற்றியடையுமாயின் உருஷியரின் பொதுவுடைமைக் கொள்கை பரவிவிடும் என்னும், ஜப்பான் வெற்றியடையுமாயின், ஆசியாக்கண்டம் ஜப்பானியர் ஆதிக்கத்திற்குள்ளாகிவிடும் என்னும் ஐரோப்பியர் அஞ்சுகின்றனர். அங்ஙனமாயின் நிலைமை மிக வேடிக்கையாகவே இருக்கும்.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

### 10 ரூபா நிதி

இன்றுகாலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர்களாற் கல்லூரியின் உதவிக்காகத் தலைக்குப் பத்துரூபா வீதம் சேர்க்கப்படும் நிதியை அரசாங்கசபைத் தலைவரும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மனேஜரும் ஆகிய திரு வை. துரைசுவாமி அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இன்றுகாலையில் முதன்முதலாகத் திரு. துரைசுவாமி அவர்களே தமது வருடாந்தத் தொகையை உதவினர்.

சென்ற சனிக்கிழமையன்று யாழ்ப்பாணம் பழைய மாணவர் சங்கத்தால் நியமிக்கப்பட்ட ஓர் உப நிர்வாகசபை கூடி இச்சமயத்தைச் சேர்ந்த பெருமக்களிடம் வருடமொன்றுக்குத் தலைக்கு 10 ரூபா வீதம் உதவி பெறவேண்டும் என்பது சம்பந்தமாக ஒரு திட்டத்தைத் தயாரித்தது. இன்று காலை நிர்வாக சபை பணத்தைச் சேர்க்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

இக்கல்லூரி வருடப்பிறப்பு விடுதலை முடிந்தபின் இன்று (18-5-36) ஆரம்பமாகின்றது. இதன்கண் இப்பொழுது "இன்டர்" வகுப்பு முதலாம் உயர்தர வகுப்பு மாணவர் திறமையோடு கல்வி பயிலுதற்கான ஒழுங்குகளும் சிறுமியர் படித்தற்கான ஏற்பாடுகளும் நன்கு செய்யப்பெற்றுள்ளன. ஸ்ரீ விஜயம் M ஆசைப்பிள்ளை [ B Sc; B Sc (Eng); A. I. L ] அவர்கள் இப்பொழுது இக்கல்லூரியின் பேராசிரியருளொருவராக நியமனம் பெற்றுள்ளார். இலங்கையின் முதன் முதல் இந்து ஆங்கிலக் கலாசாலையாக முளைத்த இக்கல்லூரியை அபிமானித்து ஆதரித்தல் சைவநன்மக்களனைவர்மீதும் பொறுத்த பெருங் கடனாகும்.

### மகோற்சவம்

சுதுமலை சுக்கலைப்பகுதியிலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மாளுக்கு நிகழும் வைகாசிமீ ௫உ (18-5-36) செவ்வாய்க்கிழமை துவஜாரோகணமாகி உற்சவம் நடைபெறும் ௨௨ (4-6-36) வியாழக்கிழமை இரதோற்சவமும், அடுத்தநாளாகிய வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

# செய்தித் திரட்டு

### அரசாங்கசபை அங்கத்தவருக்குத் தலையிலடித்த அடி கையிற் பட்டது.

கேகாலைப்பகுதிப் பிரதிநிதியாகிய மிஸ்ரர் றத்வத்தை பெண்பார் சென்றவெள்ளிக்கிழமை (15-5-36) இரவு 9 மணி 40 நிமிஷப் புகை வண்டியில் எறப்படி கொழும்புக் கோட்டைப் புகைரதஸ்தானத்தில் தமா ஏறிவந்த வண்டியிலிருந்து இறங்குபோது யாரோ ஒருவன் அவருடைய பின்புறத்து நின்று இருப்புச் சலாகையால் அவரது தலையில் அடிக்கும்படி ஓங்க அவர் தலையைக் காப்பதற்குக் கையை உயர்த்த அடி கையிற் பட்டு ஊறு படுத்தியது; அடித்தவன் உடனே ஓட்டம் பிடித்தான். அவனை இன்னமும் கண்டு பிடிக்கவில்லையாம். தேர்தற்காலத்தில் நேர்ந்த மனஸ்தாபங் காரணமாக இது நேர்ந்திருக்கக்கூடுமென்று மிஸ்ரர் றத்வத்தை சொன்னாராம்.

### தேர்தலைப்பற்றிய அபிப்பிராய பத்திரம் இலங்கை மந்திரிக்கு அனுப்பப்பட்டது.

சென்ற தேர்தலைப்பற்றி அபிப்பிராய பத்திரத்தை இலங்கைத் தேசாதிபதியவர்கள் இலங்கை மந்திரிக்கு அனுப்பியிருக்கிறாராம்.

### சென்றமாசம் விலையான மோட்டரதம் ஆக 217.

சென்றமாசம் கொழும்பில் வந்து விலைப்பட்ட மோட்டரதங்களின் தொகை 217 ஆகும்.

### யாழ்ப்பாணத்து மாலுமிகளின் திறமை.

ரங்கோன் சஜற் பத்திரிகையில் யாழ்ப்பாணத்து மீகாமன்மாரைப் பற்றி ஒருவர் கீழ்க்கண்டவாறு வியந்து எழுதியுள்ளார்:—

"சில தினங்கட்குமுன் யாழ்ப்பாணத்திலிருந்து இங்கே (ரங்கூனுக்கு) இரு பகுதியாக வந்த மாலுமிகளை மெச்சாமல் முடியாது; இவர்களுள் ஒரு கூட்டத்தார் 12 தினங்களவரையில் வங்காள விரிகுடாவிற் பெருங் காற்றினால் தங்கள் கப்பல் எடுபட்டுக் கரைகாணாது அல்லுண்டு போக அக்கப்பற்காரராகிய இவர்களுட் அதன்கணிருந்து பெரிதும் அல்லோலகல்லோலப்பட்டனர். இப்படியான நிலைமையிலேயே அவர்கள் இக்கரையில் மீட்கப்பட்டனர்; கப்பலோட்டும் விஷயத்தில் இவர்கள் ஏதும் பரீட்சையில் சித்தியடைந்தவர் அல்லர்; சித்தியடையக்கூடியவர்களுமல்லர்; இதனைப் படிப்பதற்கான புத்தகங்கள் எவையும் இவர்களிடத்திலில்லை; ஆனால் பன்னூறாண்டுகளாக இவர்கள் சந்ததிசந்ததியாய் இத்தொழிலைப் பழகி நடத்திவருகிறார்கள்; அமெரிக்கா கண்டத்தைக் கண்டுபிடித்த பெயர்பெற்ற மாலுமியாகிய கொலம்பஸ் காலத்திற்கு முந்திய இந்த இந்திய மாலுமிகளும் அராபிய மாலுமிகளும் தமதொழிலில் நிபுணர்களாகக் காணப்படுகின்றனர். யாழ்ப்பாணத்து மாலுமிகளுக்குப் பூர்வம் தொட்டு பர்மாதேசப் பிரயாணம் சகசமாய்விட்டது. இவர்கள் அக்காலத்திலே பர்மாதேசத்து அரசகனவிகை பொருத்தியை இலங்கையிலுள்ள ஒரு மன்னனுக்கு மணஞ்செய்து கொடுக்கும்படி மரக்கலத்தில் ஏற்றிவந்ததாக இதிகாசமுண்டு; இனி இவர்களுடைய மரக்கலங்கள் எந்தக் கடலிலும் எப்படியான சமயத்திலும் நின்றுபிடிக்கத்தக்கன எனக் கேள்விப்பட்டிருக்கின்றேன்."

### யாழ்ப்பாணம் ரீகல் தியேட்டரில் உஷா கல்யாணம்

முருகன் பேசும் படக்காக்ஷிக் கம்பெனியார் யாழ்ப்பாணம் ரீகல்தியேட்டரில் தற்போது "உஷாகல்யாணம்" என்னும் அழகிய தமிழ்ப் பேசும் படக்காக்ஷியைக் காட்டி வருகின்றனர். இதில் மிஸ். எஸ்.டி. சுப்புலக்ஷ்மி, சீ.வி.வி. பந்துலு ஆகியவர்கள் மிக அழகாக நடித்துள்ளார்கள். இன்னும்எம். வி. கிருஷ்ணப்பா எம். எஸ். பட்டம்மாள் முதலிய பல பிரபல நடிகர்களும் நடித்திருக்கின்றனர். நித்தம் இதனைப் பார்ப்பதற்குப் பெருந்திரளானவர்கள் போய்வருகின்றார்கள்.

### நிலத்துட் கண்ட புராதன புத்த விக்கிரகங்கள்.

பர்மிய சட்டசபைக் காரியதரிசியாகிய யூ பாடன் என்பவருடைய தோட்டத்தைப் பண்படுத்தும்போது இரு பெரிய புத்த விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டனவாம். அவைகளுள் ஒன்று "மாபிள்" எனப்படும் வெண்சுதைக் கல்லினால் அமைக்கப்பெற்றது; சிறிது பங்கப்பட்டுள்ளது. அதன்பீடம் நுண்மையான சிற்பவேலையோடு கூடியது; இது 16ம் நூற்றாண்டிற் செய்யப்பட்டதென அநுமானிக்கின்றனர். மற்றையது பச்சைக்கல்லினால் ஆக்கப்பட்டது; 15ம் நூற்றாண்டிற் செய்யப்பட்டிருக்கவேண்டுமாம். இவ்விருவிக்கிரகங்களின் பூர்வவரலாறும் அறியக்கிடக்கின்றதாம்; இந்தச் சிலைகள் இரண்டும் இப்பொழுது புதிதாய் அமைக்கப்பட்ட ஒரு மண்டபத்தில் சனங்கள் வந்து வணங்கும்படி வைக்கப்பட்டுள்ளனவாம்.

### தேகவியோகம்

#### திரு T. S. துரையப்பாப்பிள்ளை

இம்மாதம் 11 ந் திகதி திரு T S. துரையப்பாப்பிள்ளை அவர்கள் தெல்லிப்பழையிலுள்ள தமது இல்லத்திற் சிவபதமடைந்தனர். திரு துரையப்பாப்பிள்ளை அவர்கள் தெல்லிப்பழைக் கிராமச்சங்கத்தலைவராக இருந்து தம கிராமத்தினர்க்கும் அயற்கிராமத்தினர்க்கும் அரியதொண்டாற்றி வந்தார்.

இவர் கதிர்காம யாத்திரை சென்ற போது இவருக்கு மலேரியா என்னும் காட்டுக் காய்ச்சல் தொற்ற அதுகாரணமாகவே இவர் இறந்தாரென்று அறியக்கிடக்கின்றது. இவரைப்பிரிந்து வருந்தும் இவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஏனையோருக்கும் எமது அனுதாபம் உரித்தாகுக.

### மின்னேரியா திராக்ஷைப்பழம்

கொழும்பு, மே. 14

மின்னேரியாவிலுள்ள பரீக்ஷார்த்தப் பழ உற்பத்தித் தோட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்னால் பயிர் செய்த திராக்ஷைச் செடிகள் தற்சமயம் நல்ல பலனளிக்க ஆரம்பித்துவிட்டதாகத் தெரியவருகிறது. இத்தோட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் திராக்ஷைப் பழங்கள் பாலஸ்தீனத்திலுள்ள ஜாவிலிருந்து இறக்குமதியாகும் திராக்ஷையை விட மிகவும் நேர்த்தியாகவும் வாசகத்திரகேறவாறு ஏராளமாகவும் கிடைக்க வழியுண்டாவேன்பதைப் பற்றியே தற்பொழுது விவசாய மந்திரிசபையினர் ஆலோசனை செய்து வருவதாக அறியப்படுகிறது. திராக்ஷை உற்பத்தியில் வெற்றி கிடைத்துவிட்டால் இங்கு வெகுகாலமாகக் கிருஷிகம் செய்யப்படாதிருக்கும் காய்வு பிரதேசத்திற்கு அபாரமான பொருளாதார அபிவிருத்தி கிடைக்குமென்பதற்கு ஐயமில்லை.

தப்புளையிலுள்ள தோடம்பழ உற்பத்தித் தோட்டத்தின் அபிவிருத்தியைப்பற்றியும் விவசாயப்பகுதியார் கவனித்துவருகின்றனர்.

# கள்ளக் கடிதங்களால் ஏற்பட்ட கலகமா?

## உரும்பிராய்க் கொலைவழக்கு விசாரணை

### காலமானவர் ஆஸ்பத்திரியிலிருந்து அதிகாரிகளால் விலத்தப்பட்டாரா? அன்றி அவரே விலகினாரா?

யாழ்ப்பாணம் மே 14

உரும்பிராய் வாசிகளான (1) வேலுப்பிள்ளை சின்னத்துரை, (2) தம்பிப்பிள்ளை அரியம், (3) வேலுப்பிள்ளை சோமு, (4) அ. சின்னப்பு, (5) தம்பிப்பிள்ளை ராசையா என்பவர்கள் மீது சட்டவிரோதமாகக் கூட்டங்கூடியதாகவும் கலகம் செய்ததாகவும் உரும்பிராய் வாசியாகிய முருகேசு கந்தையா என்பவருக்கு மரணத்தை விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் இன்று யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி திரு. வி. எஸ். ஜபசிங்கிராமா சாக்ஷியங்களைப் பதிவு செய்தார்.

1-வது எதிரி தாம் அடைந்த காயங்களின் காரணமாகக் கோர்ட்டிற்கு வரமுடியாதிருந்தபடியால் யாழ்ப்பாணம் சிவில் ஆஸ்பத்திரியில் விசாரணை நடைபெற்றது.

கந்தையா செல்லையா என்பவர் பின்வருமாறு சாட்சியம் கூறினர்:—

கடந்த மார்ச்சு மாசம் 18உ யன்று நான் என் வீட்டு வாசலையில் நாகலிங்கம் நவரத்தினம் என்பவருடன் ஓர் மோட்டார் வாங்கு வதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அது சமையம் 5 எதிரிகளும் தடிகளுடனும் கத்திகளுடனும் தெருவிற்கு வந்து காரிலதவைத் தாக்கி அதன்மீது கல் எறிந்தார்கள். நான் வெளியே போய்ப் பார்த்தபோது 1-வது எதிரி வேலுப்பிள்ளை சின்னத்துரை என்னை வெட்ட ஓர் கொடுவாக்கத்தியை உயர்த்தினர். 2-வது எதிரியும் என்னைத் தடிகளால் அடித்தார்கள். இச்சப்தத்தைக் கேட்டுச் சாலகதியடைந்தவர் வீட்டிலிருந்து வெளியே வந்து எதிரிகளைப்பார்த்து ஏன் என்னை அடிக்கிறீர்கள் எனக்கேட்டார். 1-வது எதிரி கந்தையாவை ஓர் கொடுவாக்கத்தியினால் வெட்டினர். 2, 3 எதிரிகள் அவரைத் தடிகளால் தாக்கினர்கள்; சண்டை நிகழ்ந்தது. அதில் செல்லையா அன்னலிங்கமும் கந்தையா அப்புத்துரையும் நன்கு தாக்கப்பட்டார்கள். 4, 5 எதிரிகள் அப்புத்துரையைத் தாக்கினர்கள். கல் எறிந்தார்கள். கந்தையா செல்லையா 1 வது எதிரியிடமிருந்து கத்தியைப் பிடுங்கினர். அவர் இரு காயங்கள் அடைந்தார்.

செல்லையா அன்னலிங்கம் கூறியதாவது:—

என்னை அடிக்கவேண்டு மென்ற நோக்கத்துடனேயே எதிரிகள் அங்கு வந்தார்கள். 1935-ம் வருடத்தில் நான் மலேயாவில் இருந்தேன். அது சமையம் நான் 1-வது எதிரியின் சகோதரராகிய தம்பையாவுடன் தங்கியிருந்தேன். நான் அங்கு இருந்தபோது 1 வது எதிரியின் சகோதரி பாக்கியம் சின்னத்துரை என்னும் ஓர் ஸ்டேட் கண்டக்டருக்குச் சில கடிதங்கள் எழுதினள். அக்கடிதங்கள் என் மூலமாக அவருக்குச் சேர்ப்பிக்கப்பட்டன. இவ்விஷயம் தம்பையாவுக்குத் தெரியவந்தது. நான் மலேயாவை விட்டு யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டியதாயிற்று. சிறிது காலத்திற்குப் பின் தம்பையா என்னுடைய தகப்பனர் கர்த்தர் செல்லையாவுக்கு மலேயாவில் என்னுடைய நடத்தையைப்பற்றி ஓர் ஆபாசமான கடிதம் எழுதினர். நான் அக்கடிதத்தைப் பார்த்தேன். பதிலுக்கு நானும் தம்பையாவிற்கு ஓர் ஆஷணமான கடிதம் எழுதினேன். அவர் அக்கடிதத்தைத் தமது சகோதரராகிய 1-வது எதிரிக்கு அனுப்பினர். 1-வது எதிரி கோபமடைந்து எனக்குத் துன்பம் செய்ய விரும்பினர். பிரஸ்தாப தினத்தன்று கந்தையா அங்கு வந்தபோது 1வது எதிரி அவரைத் தலையில் அடித்தார். மற்ற எதிரிகள் அவரைத் தடிகளால் தாக்கினர்கள். நான் சோமுவால் தாக்கப்பட்டேன். எனக்குத் தலையில் காயம் ஏற்பட்டது.

காலகதியடைந்த இனத்தன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாகவும் மூன்று தினங்கள் கழிந்து அவர் ஆஸ்பத்திரியைவிட்டுச் சென்றதாகவும் அங்கு 6ம் திகதி யன்று மரணமடைந்துவிட்டதாகவும் தெரிகிறது.

மேலும் இரண்டு சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டபின்னர் நீதிபதி வழக்கை 21ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

### தாலிக்கொடியைப் பிடுங்கியமை.

நுகக்கோடையில் வசிக்கும் ஸ்ரீ A. K. கந்தப்பா என்பவருடைய வீட்டுள், திருடர் சுவரிடத்துப் புகுந்து அவருடைய மனைவி நித்திரையாகக் கிடக்கும்போது கழுத்தில் கட்டியிருந்த 400 ரூபாவரையிற் பெறுமதியுள்ள தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு போய்விட்டனராம். சந்தேகத்தின்பேரில் இப்பொழுது மூவர் பிடித்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

# ‘டிஜிபொத்தியை எங்களுக்குத் தந்துவிடு’

### இத்தாலியர் பிரான்ஸியரைக் கேட்பது

கீழ் ஆபிரிக்காவில் பிரான்ஸியருக்குரிய பிரதான துறைமுகமும் புகைரதஸ்தானமுமாகவுள்ள டிஜிபொத்தி என்னுந் தானத்தைத் தங்களுக்கு விலையாகத் தந்துவிடும்படி இதத்லிய அதிகாரிகள் பிரான்ஸியரைக் கேட்கின்றனர். பிரான்ஸியர் அதனைக் கொடுக்காமல் விடுவதற்கு என்ன செய்வதென்று யோசிக்கின்றனர். பிரான்ஸிய சோமாலிலாந்திலுள்ள இந்தத் தானதிலிருந்தே பிரான்ஸிய புகைரதம் புறப்பட்டு அடிஸ் அபாபாவுக்குச் செல்கின்றது. இப் புகைரதப் பாதையைத் தங்கள் பொறுப்பில் விட்டுவிட வேண்டுமென்பதே இத்தலியரின் பிரதான கேள்வியாகும்.

# கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பரீஷை முடிவுகள்.

1936 ம் ஆண்டு மார்ச்சுமீ நடைபெற்ற பரீஷையிற்சித்தியடைந்தோர்.

மட்டக்களப்பு

அரசடி சாதனுபாடசாலை

BA 2 பூபாலபிள்ளை E
,, 9 முருகுப்பிள்ளை M.
,, 10 ஸிவசக் S.
,, 11 அமிர்தநாத D.

காத்தான்குடி செங்கெருப் பாடசாலை

BA 17 கோளுமை V.

சாத்தான்குடி பழையதெருப் பாடசாலை

BA 20 சாமித்தம்பி T.

கோட்டைமுனை R. C. G. பாடசாலை

BA 24 அக்கமேரி M. T.
,, 25 பர்வதம்மா V. N. A.

மௌன்ற் காமல் R. C. G. பாடசாலை

BA 30 சரோ M. (Sr)

காலி

மல்கூஹ்னுஸ்சுல்ஷியா மெயின்ற் க. பா

GT 1 காபில் A. C. A.

யாழ்ப்பாணம்

அளவெட்டி நாகபூஷணி வித்தியாசாலை

J 1 கார்த்திகேசு N.

தளவெட்டி சதானந்த வித்தியாசாலை

J 2 இராசையா S.
,, 3 சுப்பிரமணியம் M.
,, 4 மனுவேல்பிள்ளை T.
J 73 கைமுதத V.

சுழிபுரம் ஐக்கியசங்க வித்தியாசாலை

J 7 முத்துக்குமாரு P.

கொழும்புத்துறை சாதனுபாடசாலை

J 8 மரிதசின் S. (முதலாம் பிரிவு)
,, 9 குலசப்பிள்ளை J.

ஏழாலை அரசினர் பாடசாலை

J 10 சிவகுரு K.
,, 11 தங்கவடிவேலு S

மீசாலை வடக்கு வீரசிங்க வித்தியாசாலை

J 23 சரவணமுத்து K.

முல்லைத்தீவு சைவவித்தியாசாலை

J 30 முத்தையா K.

நவாலி கலவன்பாடசாலை

J 39 இராசா A. P.

உடுவில் தெற்கு சைவவித்தியாசாலை

J 47 அப்பாத்துரை S.
,, 48 பேபன் P.

வண்ணார்பண்ணை கலவன் பாடசாலை

J 66 கந்தையா S.
,, 68 சிவசுப்பிரமணியம் A.

வங்காலை சென் அன்ஸ் பாடசாலை

J 70 மிருன்டா G. E.
,, 72 சவரிமுத்து A.

சுன்னுகம் ஸ்ரீ இராமநாதன் சாதனுபாடசா

J 74 தெய்வானைப்பிள்ளை K.
,, 75 தங்கம்மா S.
,, 78 செல்லம் V.
,, 79 தேவமணி S.

இளவாலை R. C சாதனுபாடசாலை

J 81 பஸ்தியாம்பிள்ளை M.
,, 82 சவரிமுத்து A.
,, 83 நீக்கிலஸ்பிள்ளை R.
,, 86 அந்தோனிப்பிள்ளை L.
,, 88 ஜெதேகி M. J.

யாழ்ப்பாணம் கன்னியாஸ்திரிமடம்

J 90 சவரிமுத்து A.

வளலாய் அமரிக்கன்மிஷன் பாடசாலை

J 98 நாகரத்தினம் V.

வேம்படி விடுதிப் பெண்பாடசாலை

J 101 தம்பிஐயா N.
,, 102 ஐயாத்துரை T.

விளிசிட்டி கலவன் பாடசாலை

J 105 மீனுட்சி K.

பேராதனை.

பேராதனைத் தமிழ்க்கலவன் பாடசாலை

PP 2 பொன்னுச்சாமி N.

பருத்தித்துறை

கட்டைவேலி கலவன்பாடசாலை

PT 3 மகாலிங்கம் K.

புலோலி மேற்கு சைவப்பிரகாச வித்

PT 8 முருகுப்பிள்ளை S.
,, 10 சர்வணம் K.

தன்னுலை வடக்குக் கலவன்பாடசாலை.

PT 12 அமிர்தலிங்கம் V.
,, 14 செல்லத்தம்பி K.

பருத்தித்துறை த்விபாஷா பெண்பாடசாலை

PT 20 மங்களவரி T.
20 வைதயநாயகி N.

உடுப்பிட்டி கைத்தொழிற் பாடசாலை.

PT 24 வைத்தியலிங்கம் S.
,, 25 ஐயாத்துரை G.

# கோட்டுச் செய்திகள்

க. கி.

### தந்தைமீது வழக்கு:

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் அராலி மேற்கில் வசிக்கும் தலையசிங்கப் பெண் நாகம்மா தனக்கு அடித்துச் சங்கிலியைப் பறித்ததாகத் தனது தகப்பன் பெரிய தகப்பன் ஆகிய இருவருக்கு மெதிராக வழக்குத் தொடர்ந்தாள். தகப்பன் பெயர் வேலாயுதர் துரைத்தினம், பெரிய தகப்பன் பெயர் வேலாயுதர் முருகேசு.

நாகம்மா கூறியதாவது:- 14-5-36 பிற்பகல் 4. 30 மணியளவில் நான் எனது சொந்தக்காரி தெய்வானை வீட்டிலிருக்கும் போது எனது தகப்பனுர் வந்து அடித்ததுமல்லாமல் எனது கழுத்திலிருந்த சங்கிலியையும் தாலியையும் அறுத்துக் கொண்டு போய்விட்டார்.

நீதிபதி: நீ உனது தகப்பனை மறியலுக்கு அனுப்ப விரும்புகிறயா? யோசித்துச் சீக்கிரம் சொல்லு. இல்லாவிட்டால் இத்துடன் விட்டுவிட்டு ஒடு. திரும்பவிட நீ எத்தனிப்பாயாகில் உனக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள் என்று கூறியபின் நாகம்மா தானே வழக்குத் தொடரத் தான் போவதாகச் சொல்லிக் கூறினள். இதற்கு முன்னும்காலையில் ஒருமுறை நடுப்பகலில் ஒருமுறை எனது இருப்பிடம் வந்தார். அப்பொழுதும் எனது தகப்பனுர் என்னை விழுத்திக் குத்தினர். நான் விதானை வீட்டுக்குப் போனேன். அவரைக் காணவில்லை. வழக்கு வருகிற 25-5-36 க்குத் தவணையிடப்பட்டது.

### திருட்டு வழக்கு

சென்ற வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் வண்ணார்பண்ணைச் சிவன்கோவில் வடக்கு வீதியிலிருக்கும் வைத்தீஸ்வர வித்தியாசாலை உபாத்தியாயரில் ஒருவராகிய கணபதிப்பிள்ளை கதிரவேலு என்பவரிடம் வேலைக்காரனுகவிருந்த மலையாளத்தைச் சேர்ந்த இராமன் என்பவன் சென்ற பங்குனி 31 ம் திகதி உபாத்தியாயருடைய அறையிலிருந்த ஓர் இரும்புப் பெட்டியையும் அதனுள் இருந்த சாமான்களையும் திருடிக்கொண்டு அநுராசபுரம் சென்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கில் எதிரி அநுராசபுரப் பொலிசாரால் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் மறியல் வீட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தபோது எழுதிய ஓர் கடிதத்தை மறியல் வீட்டுச் சேவகர் ஒருவர் வாசித்து அதிற் சந்தேகங்கொண்டு மறியல் வீட்டு அதிகாரியிடம் காட்டி அதிலிருந்து இவன் தான் செய்தது என்று கண்டுபிடிக்கப்பட்டது. அவன் அந்தக் கடிதத்தில் அநுராசபுரத்தில் இருக்கும் ஒருவருக்கு எழுதியதாவது:—

துணிகளும் நோட்டும் சாமி என்பவனிடமிருக்கின்றன. இக்கடிதத்தையும் சாமான்களையும் மற்றவர்களுக்குக் காட்டக் கூடாது. இவ்வழக்கு முடிந்தபின்தான் மேனன் என்பவனிடமிருந்து 50 ரூபா பெறக்கூடும்.

உபாத்தியாயர் கணபதிப்பிள்ளை கதிரவேலு கூறியதாவது:-

சென்ற பங்குனி மீ 31 ம் திகதி காலை நான் பாடசாலைக்குப் போகும்போது எனது அறையில் ஓர் இரும்புப் பெட்டியை வைத்துப் பூட்டிச் சென்றேன். அதற்குள் ஏழு வேட்டி, 200 ரூபா ஒரு நோட்டொன்று ஒரு கைக்கெடிகாரம், ஓர் பவுண்டன் பேனு, பணம் இருபத்திரெண்டு ரூபா ஆகியவைகளுண்டு. எதிரி அநுராதபுரத்திற் பிடிக்கப்பட்டான்.

இவ்வழக்கு வருகிற 25-5 36க்குத் தவணையிடப்பட்டது.

### கத்திக்குத்து வழக்கு

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் வட்டுக்கோட்டையில் வசிக்கும் குழந்தைவேலு சதாசிவம் என்பவரை அவ்வூர் கணபதி செல்லையா என்பவர் ஓர் கத்தியால் நெஞ்சிற் குத்திக் காயப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தார்.

குழந்தைவேலு சதாசிவம் கூறியதாவது:—

‘சென்ற 2ம் திகதி நான் எனது வீட்டிலிருக்கும்போது எதிரி எனது வளவுக்குள்ளாற்போனபோது நான் அவரை எனது வளவுக்குள்ளாற் போகக்கூடாது என்று கூறினேன். எதிரி அதைக்கேட்கவில்லை. நாங்கள் இருவரும் பேச்சுப்பட்டோம். எதிரி இதற்கிடையில் எனது மார்பிலும் கையிலும் ஓர் கத்தியாற்குத்திக் காயப்படுத்தினன்.

வழக்கு வருகிற ஆனி மீ 11 ம் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

### டிக்கட்டில்லாமல் பிரயாணம்

எதிரிக்கு 15 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் 14-5-36 வியாழக்கிழமை J. W. S. லூஸ் என்னும் புகைரத டிக்கட் பரிசோதகர் 11-ம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் புகைரதத்தில் அருக்காமத்தில் வசிக்கும் H. W. பேர்னுந்து என்பவன் தளாவையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்தானெனக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

J. W. S. லூஸ் கூறியதாவது:—

சென்ற 11-ம் திகதி நான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் புகைவண்டியில் வரும் பிரயாணிகளின் டிக்கட்டுகளைப் பரிசோதிக்கும் கடமை பார்த்தேன். அப்போது எதிரி யாழ்ப்பாணம் ஸ்டேஷனில் 1ம் 2ம் வகுப்புப்பிரயாணிகள் செல்லும் கதவுமார்க்கமாக மற்றும் பிரயாணிகளுடன் சென்று வெளியேற எத்தனித்தான். கதவண்டை நின்ற டிக்கட்டுகளைச் சேர்ப்பவர் குறித்த எதிரியிடமும் டிக்கட்டைக் கேட்டபோது அவன் தனது எசமானிடம் இருக்கிறதாகக் கூறினன். டிக்கட்பெறுவோர் எதிரியை மறித்துவைத்திருந்தார். பிரயாணிகள் சென்றதும் அவர் இவ்வெதிரியை என்னிடம் ஒப்புவித்தார். நான் எதிரியைச்சோதனை செய்தபோது எதிரியிடம் டிக்கற் ஆதல் அல்லது பாஸ் ஆதல் காணப்படாமையால் எதிரியைக் கோட்டுக்கு அனுப்பி வைத்தேன்.

இதன் பிற்பாடு E. W. D. குணசிங்கி சாட்சியம் கூறியபின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக்கண்டு 15 ரூபா அபராதம் அல்லது 3 வாரக் காவல் தண்டனை விதித்தார்.

### “நான் கொல்ல நினைந்தமைக்குக் காரணம்”

கண்டிச் சுப்றீம்கோட்டு விசாரணையில் கவான்றி பர்நாந்து என்பவன் தன்மனைவியையும் வேலைக்காரனையும் கொல்ல முயன்ற குற்றத்தின் பேரில் 4 வருடக் கடுங்காவல் விதிக்கப்பெற்றான். நீதிபாசர் எதிரியை நோக்கி “நீ ஏதும் சொல்வதற்குண்டோ” என்று வினவியபோது; ‘ஆண்டவனே; இதுதான் உண்மை என் பெண்டாட்டி வேலைக்காரனோடு கூடிக்கொண்டு ஓடினுள்; அதனுல் ஆத்திரங் கொண்டு இருவரையுங் கொலை செய்ய முயன்றேன்; இப்பொழுதும் அவள் என்னுடன் வரவேணும். இல்லையேல் தம் பெற்றாருடன் போதல் வேண்டும்’ என்று பதில் சொன்னுன்.

### “நீர்தாமா நீதிவான்? உம்மைத்தான் காணவந்தேன்.”

மூறியல் பேரேஸ் என்னும் ஒருத்தி தற்கொலை செய்யும் நோக்கமாக ஏதோ நஞ்சுத் திராகவத்தை எடுத்துக் குடித்தாளென்ற குற்றச் சாட்டில் கொழும்புப் பொலிஸ் நீதிபதியாகிய ஸ்ரீ J N. ஆறுமுகமவர்கள் முன்னிலையிற் கொண்டுவரப்பட்டாள்; அவள் கூட்டில் ஏறியவுடன் “ஐயா, நீர்தாமா நீதிவான்? உம்மைத்தான் காணவேணுமென்று வந்தேன்; துரையே, இந்தப் பொலிஸ்காரர் என்னை அங்கேவா இங்கே வா என்று இழுத்துச் சங்கடப்படுத்துகிறர்கள்! எனக்கு என் வீட்டில் ஆறுதலாக இருக்கவிடுகிறர்களில்லை... [illegible] ....” என்றாள். நீதிபதி அக்[illegible]யம் சமுகமாய் நின்ற அவள் சகோதரரைப் பார்த்து ‘இதென்ன’ என்று கேட்டபோது “ஐயா, முதற்றவணைக்கு இந்தக் கோட்டில் வந்துபோன நாட்தொடக்கம் என் சகோதரி இப்படித்தான் மாறுபட்டத்தோடு காணப்படுகிறுள்” என்று பதில் சொன்னுன். நீதிபதி குணதோஷத்தைப் பரிசோதனை செய்யும் சாலைக்கு அப்பெண்ணை அனுப்பும்படி கட்டளையிட்டார்.

# கடிதம்.

## பொதுக்கூட்டம்

நிகழும் தாதுவருஷ சித்திரைமீ 31ம் திகதி (13-5-36) புதன்கிழமை பிற்பகல் 6½ மணியளவில் வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலை பழையமாணவர் சங்கத்தின் ஆதரவில் ஒரு பொதுக்கூட்டமானது, வியாவில் ஐயனார்கோயில் முன்வீதியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு V. வீரசிங்கம், B A அவர்களின் தலைமையில் வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலைக்கு 1890ம் ஆண்டு 900 இலக்கத்தில் பிரசித்த நொத்தாரிசு வே. கனகரத்தினம் முகதாவில்முடித்த தர்மசாதன உறுதிப்படி மூன்று நியாசதாரி (Trustees) களை நியமிப்பதற்காக வேண்டிய வழிவகைகளைப்பற்றி ஆலோசிப்பதற்காகக் கூட்டப்பெற்றது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் திரு. V. வீரசிங்கம், அவர்கள் மேள வாத்தியத்துடன் கோயில் வீதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பொதுக்கூட்டம் தேவாரபாராயணத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, முதலில் வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலைப் பழையமாணவர் சங்கக் காரியதரிசி திரு. V. வீரசிங்கம் அவர்களைச் சபையாருக்கு அறிமுகஞ் செய்து வைத்தார்.

இரண்டாவதாக தலைவர் அவர்கள் பொதுஸ்தாபனங்களைப்பற்றியும் அவற்றை விருத்தி செய்யும் வழிவகைகளைப் பற்றியும் ஒரு சொற்பொழிவாற்றியபின் ஷெ வித்தியாசாலையானது தர்மசாதன உறுதிப்படி நியாசதாரிகள் வசமே ஒப்படைத்தாற்றான் மேன்மேலும் விருத்தியடையச் செய்வதற்கு ஏதுவாயிருக்குமென்றும் தற்போழுது அவ் வித்தியாசாலைக்கு மனேஜராகவிருக்கும் திரு இ. நாகலிங்கம் அவர்களை பொதுஜனவிருப்பத்தின்படியும், தர்மசாதன உறுதிப்படியும் நியாசதாரிகள் வசமே ஒற்றுமையாய் ஒப்படைத்தல் வேண்டுமெனப தாகவும் கூறினார்கள்.

மூன்றாவதாக திரு. சேபு பொன்னையா அவர்களால் வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவின்கீழ் கூட்டப்பெற்ற இப்பொதுக் கூட்டமானது ஷெ வித்தியாசாலையை 1890 ஆண்டு 900 இலக்கத்தில் பிரசித்த நொத்தாரிசு வே. கனகரத்தினம் அவர்கள் முகதாவில் முடிந்த தர்மசாதன உறுதிப்படி மூன்று நியாசதாரிகள் (Trustees) வசமே ஒப்படைக்க விருப்பப்படுகின்றது. என்னும் தீர்மானமானது பிரேரிக்கப்பட்டும், திரு ச. வைத்திலிங்கம் அவர்களால் ஆமோதிக்கபட்டும், திரு. க. நமசிவாயம் அவர்களால் அநுமதிக்கப்பட்டும் சபையோரால் சர்வசம்மதமாய் நிறைவேற்றப்பட்டன,

நான்காவதாக ஷெ தர்மசாதன உறுதிப்படி நியாயதாரிகளை யாழ்ப்பாணம் பெரியகோட்டின் அநுமதியுடன் அமைக்கப்படவேண்டியிருப்பதால் அவ்வாறு அமைப்பதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்வதற்காக எழுவர் அடங்கிய அதிகார சபையும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. அவர்கள் பெயர்கள் கீழ் வருமாறு:-

1 பிரமஸ்ரீ கா வேதக்குட்டி ஐயர்,
2 திரு ச. வயித்திலிங்கம், தலைவர்
3 திரு. வி வே. சண்முகம்,
4 திரு ஆ. கணபதிப்பிள்ளை,
5 திரு க. நமசிவாயம், தனாதிகாரி
6 திரு க கந்தையா,
7 திரு சோ. மு. பொன்னையா, காரியதரிசி

ஐந்தாவதாக ஷெ காரியங்களை நிறைவேற்றுவதற்காக வேண்டிய செலவுகளுக்காகப் பணஞ் சேகரிப்பதற்கும் எழுவர் அடங்கிய ஒரு நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றது.

அவர்கள் பெயர்கள் கீழ் வருமாறு:-

1 திரு க. நமசிவாயம்,
2 திரு வே. சதாசிவம்,
3 திரு வி. வே. சண்முகம்,
4 திரு சோ. மு வேலுப்பிள்ளை,
5 திரு கா. கந்தையா,
6 திரு க. சண்முகம்,
7 திரு க. திருவாதர்,

ஆறுவதாக அக்கிராசனர் முடிவுரையுடனும், வந்தனோபசாரவாழ்த்துடனும், தேவார பாராயணத்துடனும் 8½ மணியளவில் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

S. M. PONNAYAH.
Secretary,
Viyavil Saiva Paripalana Vidyasslai
O. B. A


THE
"NEW ERA SERIES"
OF
School Text Books

பாடசாலைகளுக்குரிய
புதிய தமிழ் நூல்கள்

செந்தமிழ்க் கருவூலம்
(1—3)
கதாவாசகம்
முதலியன.
அரசினர்
தவிபாஷா ஆசிரியர்

திரு. மா. பீதாம்பரன் அவர்கள்
இயற்றியவை.
விரைவில் வெளிவரும்.
(Q. 22· 1-5-36—31-7-36.) (நி)


## கந்தபுராணக் கவிநுட்பம்.

(1-ம் பக்கத் தொடர்)

தகனராகச்சென்று கிரித்துச் சாம்பராக்கிய மூர்த்தி வேதாகமங்களையெல்லாம் திருவாய்மலர்ந்தருளிய தெய்வ இந்திரனொருவனுக்குத் தமது பரமேசுவரத் திருக்கோலத்தைக் காட்டி அவன் கர்வத்தைப் பங்கஞ் செய்த பரம்பொருள், விடுவசேனன் என்னும் சேனைத்தலைவனை ஆடியகிடைக் கூத்தை விதந்து அவனுக்குச் சக்கரம் ஈந்தவியலன், சமியேனுக்கு இன்னருள் புரிந்து தமியேன் எடுத்துக்கொண்ட இந்த பேலான நூல் இனிது நிறைவேறவுஞ் செய்வர் என்றனம தொனிக்க ஆசாரிய சுவாமிகள் இங்ஙனம் பாடியருளினர் பேலும்காஞ்சி புரத்திற் கோயில் கொண்டருளிய விகடயகர் விகடசக்கர விநாயகர் என்னுந் திருநாமத்தையும் உடையவர். இதன் வரலாறு அடுத்த திருவிருத்தத்தில் எடுத்துக் காட்டப்படும்.

## தென்மராட்சி இந்து வாலிபர் சங்கம்.

மேற்படி சங்க ஆதரவின் கீழ் சித்திரை மீ 27உ (9-5-36) சனிக்கிழமை மாலை 7 மணியளவில் ஷெ சங்க வாசிகசாலை மண்டபத்தில் உயர் திரு. சுவாமி உருத்திரேசுவரா அவர்கள் தலைமையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப்பண்டிதரும் இந்துசாதனப் பத்திராசிரியருமாகிய திரு. ம. வே திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்களால் "சமயமும் கல்வியும்" என்னும் விஷயம்பற்றிக் கற்றோரும் மற்றோரும் கேட்டின்புறும்படியாகச் சுவைமிக்கதோர் விரிவுரை நிகழ்த்தப்பட்டது. பின்னர்த் தலைவர்கள் முடிவுரை கூறுமிடத்துத் தீக்ஷையின் அவசியத்தைப் பற்றியும் "தீக்ஷ" என்னும் பதம் என்ன வினையடியிலிருந்து பிறந்ததென்றும் அதன் பதார்த்தம் இன்னதென்றும் இனிதாக எடுத்து விளக்கிக்காட்டி முடிவு செய்தார்கள். அதன் பின்னர் சாவகச்சேரிக் கிராமச்சங்கத் தலைவரவர்களால் தலைவர், பிரசாசர், சபையோர்க்கு நன்றி கூறப்பட்டபின் கூட்டம் 9-மணியளவில் நிறைவெய்தியது. கடிதம்.

## சன்மார்க்கசபை மயிலிட்டி, தொல்லிப்பழை.

இச்சபையின் இரண்டாவது ஆண்டுவிழா இம்மாதம் 9-ம் 10-ம் திகதிகளாகிய சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெற்றது. இதற்கென மாணிக்க வாசக நூல் நிலையத்தின் கருகாமையில் விசேஷமாக நிறுவப்பட்ட 'கமலாநேரு' பந்தலிலேயே கூட்டம் நடைபெறலாயிற்று திரு எஸ். சுவாமிநாதன் B A தலைமை வகித்தார்.

வழக்கம் போலப் பூசையோடு கூட்டம் ஆரம்பமாயிற்று. தலைவர்க்கு ஒரு வரவேற்புப் பத்திரம் அளிக்கப்பட்டு அதற்கு அவர் பதில் கூறி முடித்ததும், சென்ற ஆண்டு அறிக்கைகள் வாசிக்கப் பெற்றுச் சபையோரால் அங்கீகரிக்கப் பெற்றன.

ஜோர்ஜ் மன்னர் மரணத்தைக் குறித்தும் இந்தியதேசிய மணியவிய கமலா நேருவின் மரணத்தைக் குறித்தும், அநுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன அதேதாற்போல், மயிலிட்டிக் கிராமச் சங்கத்தார் மாணிக்கவாசக நூல் நிலையத்திற்கு 50 ரூபாவை உபகரித்தமைக்காகப் பாராட்டுக் கூறப்பெற்றது. கம்ப இராமாயணம் என்னும் பொருள்பற்றிக் கோப்பாய் அரசினர் பாடசாலை ஆசிரியர் திரு. ம. வே மகாலிங்கசிவம் அவர்களாலும் 'திருக்கூட்டம்' என்னும் பொருள்பற்றித் திரு எஸ். ஞானப்பிரகாசம் B. SC அவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன. அதன்பின் கதாப்பிரசங்கமும் சங்கீதமும் நடைபெற்றன. ஈற்றில் காரியதரிசி சொற்பொழிவாளர்க்கு நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது

அடுத்தநாட் காலை 9 மணிக்கு ஈழகேசரிப் பத்திராதிபர் திரு. நா. பொன்னையா அவர்களின் தலைமையின் கீழ் ஒரு காரிய நிர்வாகசபைக் கூட்டம் கூடியது. இக்கூட்டத்தில் புதுவருஷத்திற்குரிய அங்கத்தினர் தெரிவுசெய்யப்பட்டனர். —கடிதம்

# கல்முனைக் கத்திக்குத்து வழக்கு.

## வழக்காளி கூறிய சாக்ஷியம்.

சென்ற 14-5-36 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டு முன்பாக கல்முனை என்னுமிடத்தில் வசிக்கும் வல்லைஞர் வகுப்பைச்சேர்ந்த சின்னத்தம்பி-முருகேசு என்பவருக்கு அவ்வூர் தம்பையா-கந்தையாவும் பண்டாரம் - கப்பையாவுமாகச் சென்ற புரட்டாதிமீ 22ம் திகதி ஒ பொல்லால் அடித்து ஓர் கத்தியால் கையில் குத்தியும் காயப்படுத்தினதாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக நியாயதுரந்தரர் H. R. அரியகுட்டியின் அநுசரணையில் பேசிக நியாயவாதி T. R. நல்லையாவும் எதிரி சார்பாக சாா சபாபதியின் அநுசரணையைக் கொண்டு வி. யோசேப்பும் ஏற்பட்டிருந்தார்கள்.

வழக்காளியாகிய சின்னத்தம்பி-முருகேசு கூறிய சாட்சியமாவது:

சென்ற புரட்டாதிமீ 22ம் திகதி நான் எனது கடற்றொழில் முடிந்தவளையை அடைந்தேன. அப்போது என்னுடன் ஆறுமுகமும், இளையதம்பியும் அல்லது இளையபாவுமுடனிருந்தார்கள். நாங்கள் கரைக்கு வந்ததும் தம்பையாஎன்னைப்பார்த்து "நீ தொடர்ந்த வழக்கில் என்னை மறியலுக்கு அனுப்பிப்போட்டாயோ" என்று கேட்டார். நான் உடனே அவரைப்பார்த்து "நீ வைத்த வழக்கில் என்னை மறியலுக்கு அனுப்பிப் போட்டாயோ" என்று கேட்டேன். இதற்கு அவர் கையிலிருந்த பொல்லால் எனது தலையில் ஒருமுறையும் மற்றைய இடங்களில் 3, 4, முறையும் அடித்தார். நான் அவரது தலைமயிரை எனது இடதுகையால் பிடித்துக்கொண்டு இருவருமாகச் சிறுதகோம் சண்டையிட்டோம். இதற்கிடையில் கந்தையா சின்னப்புவின் வளவுக்குள்ளால் ஓடிவந்து கத்தியால் குத்தினார் நான் அறிவு மயங்கி விழுந்துவிட்டேன். இதன்பிற்பாடு யாழ்ப்பாணம் பொலிஸ்டேஷனுக்குச் சென்றேன். அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டேன் ஆஸ்பத்திரியில் 53 நாள் சிகிச்சைக்காக இருந்தேன. தம்பையா எனக்குப் பொல்லால் அடித்தார்.

மேலும் வழக்காளி குறுக்கு விசாரணையின்போது கூறியதாவது:-

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் தம்பையா என்னையும் எனது மகனையும் குற்றஞ்சாட்டி ஓர் வழக்குத் தொடர்ந்திருந்தார். அந்த வழக்குப் புரட்டாதிமீ 19ம் திகதி கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அன்று நானும் எனது மகனுமாக இனிமேல் இவர்களை ஒரு வகையாலும் தொந்தரவு செய்கிறதில்லை என வழக்குக்கோப்பிற் கைபொப்பமிட்டுச் சமாதானமாகச் சென்றோம். இவ்வழக்குக்கு எதிர் வழக்காக எங்களால் வைக்கப்பட்ட வழக்கும் சமாதானமாக விடப்பட்டது நான் சில கோங்களில் (அகப்பட்டால்) மதுபானம் பாவிப்பதுண்டு. நாங்கள் கள்ளுக்குடிக்கில் கொட்டடித் தவறணைக்குப் போகிற வழக்கமுண்டு. ஆனால் கல்முனை பாஷையூர் ஆட்கள் அநேகமாகத் தண்டித் தவறணைக்குத்தான் போவார்கள். நான் 1ம் எதிரிக்கு அடிக்கவில்லை, மற்றவர்கள் அடித்ததையும் காணவில்லை. எனக்குத் தலையில் அடித்ததும் ஓர் பொல்லாலேயாகும். ஆனால் காயமில்லை. நான் எனது வாக்குமூலத்தை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மறாரன் தான் கொடுத்தேன. 1ம் எதிரி கத்தியாற் குத்தினார் என்று பொலிஸ் உத்தியோகத்தருக்கும் சொன்னேன். நான் கத்தியைக் காணவில்லை. இளையபாதான் அது ஒரு வில்லுக்கத்தி என்று சொன்னார். இளையபாதான் 1ம் எதிரிக்கு அடித்ததாகச் சொன்னார். நான் நிலத்தில் விழுந்த பிறபாடே இப்படி அடித்ததாகும். இக்காரியம் இன்னமொருவரைக்கொண்டு உண்டாக்கினதென்பதை மறுக்கிறேன்.

விசாரணையின்பின், இவ்வழக்கு 21-5-36க்குத் தவணையிடப்பட்டது.


கொய்லன் வங்கி
(லிமிற்றெட்)
(1919-ம் ஆண்டு
திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)
யாழ்ப்பாணம்.

காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்
( FIXED DEPOSITS )

எங்கள் வங்கியில் க்ஷேமிக்கும்படி தரப்படும் வைப்புப்பணத்திற்குப் பின்வரும் விகிதமான வட்டி கொடுக்க தீர்மானஞ் செய்திருக்கிறோம்.

| | |
|---|---|
| 6 மாச காலம் | 3½ விகிதம் |
| 12 மாச காலம் | 4½ விகிதம் |
| 24 மாச காலம் | 5 விகிதம் |

ஏனைய விபரங்களை எங்கவிடம் விஷளப்பித்துகொள்ளலாம்.

V. C. ஓமன் B.A.
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23-5 to. 22-5-36


## விளம்பரம்.

கதிர்காமம் மகோற்சவம் முடிந்தபின்பு
யாழ்ப்பாணம் தண்டலுக்கு வந்து சேர்ந்த பணம்:—

| | ரூ. ச. |
|---|---|
| ஆடிஅமாவாசையன்று கிரிமலைத்தீர்த்தக்கரையில் சேர்ந்தபணம் | 2 -22½ |
| நல்லூர்த் தேர் தீர்த்த உர்சவ இருதினங்களிலும் சேர்ந்த பணம் | 18-57 |
| செல்வச்சந்நிதி தேர் தீர்த்த உற்சவ இரு தினங்களிலும் சேர்ந்த பணம் | 48-26 |
| வல்லிபுரக்கோயிலில் ... ... | -72 |
| சுன்னாகம் ஐயனார் கோயிலில் ... ... | 1-63 |
| மருதடி, தோ தீர்த்தங்களில் ... .... | 10 62½ |
| பண்டித்தலைச்சி அம்மன் கோயிலில் ... ... | 2-36 |
| சுன்னாகச் சந்தையில் யாசகம் செய்த ஒன்பது தினங்களிலும் | 17-58 |
| சங்கானைச் சந்தையில் ஐந்து தினங்களில .... | 23-42 |
| சாவகச்சேரிச் சந்தையில் பதினொரு தினங்களில .... | 32-59½ |
| கொடிகாமச் சந்தையில் எட்டுதினங்களில் .... | 14-09 |
| எழுதுமட்டுவாள் சந்தையில் ஒரு தினில .... ... | 2-45 |
| பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணப் பிரயாணஞ் செய்யும் 18 பஸ்களால் சேர்ந்த பணம் | 114-30 |
| கீரிமலையிலிருந்து யாழ்ப்பாணம் பிரயாணஞ்செய்யும் 22 பஸ்களால் சேர்ந்தபணம் | 119-09 |
| காரைநகரிலிருந்[illegible] யாழ்ப்பாணம் பிரயாணஞ்செய்யும் 16 பஸ்களால் சேர்ந்த பணம் | 112-32 |

சென்ற கார்த்திகைமீ 20உ கதிர்காமத்துக்குச் சென்று அங்கு திருக்குள வேலை ஆரம்பித்தேன். திருக்குளப் பிரமாணம் 50 முழச் சதுரங்கமானது. அதற்கு என்னிடமிருந்த பணம் முழுவதையும் செலவு செய்தேன். செலவுசெய்து இருந்தபணம் ஒழிந்தவுடன் பங்குனிமீ 18உ கதிர்காமத்திருந்து வெளியேறி யாகஞ்செய்து திரிகிறேன். அதில் இப்போ ரூபா 36—50 என்னிடம் இருக்கிறது. இவ்வருடம் நிகழும் உற்சவம் பதினைந்து தினங்களுக்கும் தண்ணீர்ப்பந்தலை நடப்பிக்கப் பண உதவி வேண்டியிருக்கிறது.

ரமண சங்குசாது
நிசமாறு

(Mis 35. 18 - 5 - 36.)


கோடைகாலத்திற் பிடிக்கும்
தலைவலியைத் தடுப்பதற்காக
ஒரு போத்தல்
லிட்டிடில்ஸ் ஓரியண்டல்பாம்
தைலத்தை
வாங்கி வைத்திருங்கள்
இதுவே
இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்

Y 58 1-1—31-12-36)

வேலைசெய்யும் திறத்தையோ
நீடித்த பாவிப்பையோ
விலையையோ

எதை•நீங்கள் பார்த்தாலும்



மொரிஸ்—கொம்மர்ஸல்

டிரக்வே

உங்கள் பணத்தைப் போட்டுவைப்பதற்குத் தகுந்ததாகும்.

வேண்டுவோர் எழுதி விபரம் அறிந்துகொள்ளலாம்.

சோல் ஏஜென்ட்ஸ்

உவாக்கர் ஸன்ஸ் அன்கோ, லிமிற்றெட் கொழும்பு.

யாழ்ப்பாணத்திற்கும்,

திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னார், அநுராதபுரம், ஆதிய இடங்களுக்கும் சோல் ஏஜெண்ட்ஸ்

வி. செல்வத்துரை & சன்ஸ்

அதிகாரம் பெற்ற ஏஜென்ஸ்

ஆஸ்பத்திரி றோட்டு, யாழ்ப்பாணம்.

Y 137. 19-8-35. — 18-8-36

## யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,367 00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமயம் சராசரி 500 ரூபாவிற்குக் குறையாமல் இருக்கும் தொகைக்கு 1 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலவரையறுத்து வைப்பதற்கு வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "ராஷனல்" வங்கியும் "இம்பீரியல்" வங்கியும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதிகளிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் காரமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாதந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடன் கொடுக்கலாம். (இக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.

(Y-2(3. 21-11-:5—20 11-36) (ச.) மனேஜர்

சகாய விலை

## சிறந்த தேக்கமரங்கள்!

இந்த மேமாசம் 4-ம் தேதிதொடக்கம்
31-ம் தேதி முடிய குறைந்தவிலை.

பெருந்தொகையான தேக்கமரங்களை நாங்கள் விரைவில் இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால், இப்பொழுது இங்குள்ள சிறந்த ரங்கூன்சியப தேக்கமரங்களையெல்லாம், மேலே கட்டப்பட்ட தேதிகளுக்கிடையில் குறைந்தவிலைக்கு விற்பதற்காகிய ஒழுங்குகள் செய்துவிட்டோம்.

இந்த அருமையான சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

S. விரகத்திப்பிள்ளை & ஸன்ஸ்

தேக்கமர ஓட்டு வியாபாரிகள்.

(Mis. 25 7-5to 31- 5-36.)

## பேய் ஆட்டிய பூசாரி.

### மனைவியைக்கத்திக் கிரையாக்கினன்.

—o—

சாணிப்பேட்டைடக்கடுத்த காரைக் கிராமச் சேரியில் வாழ்ந்து வந்த ஆறுமுகத்தன் என்பவன் மனைவி அன்னம்மாள் என்பவளுக்குச் சிலமாதகாலமாய் பேய் பிடித்திருந்ததாகவும் அதை நிவர்த்திக்க வேண்டி முனிசாமி என்பவனிடம் பேய் ஓட்டிச் சொஸ்தப்படுத்தும்படி ஒப்படைத்ததாகவும், கடந்த தை மாதம் கடைசி வியாழக்கிழமை இரவு 10 மணிக்கு எதிரி அன்னம்மாள் என்பவளைப் பேய் ஓட்டவேண்டி உட்காரவைத்துச் சுற்றிலும் வைக்கோல் போட்டு அடுக்கிச் சற்பூரம் கொழுத்தி வைத்த பின்னர் பூசாரி முனிசாமி என்பவன் தன்மேல் ஆவேசம் வந்திருப்பதாகச் சொல்லி நீண்ட அலகுக்கத்தியை எடுத்துக்கொண்டு ஆடிவந்து அவளைத் தேகத்தின் பல இடங்களில் குத்தி ரண காயங்கள் உண்டாக்கி வந்ததாகவும், பின்னர் பார்க்கையில் அவள் உடம்பு பூராவும் நெருப்பால் தகிக்க வெந்து போனதோடு ரண காயங்களின் கொடுமை பொறுக்கமாட்டாமல் அவள் பொழுது விடிவதற்குள் பரலோகம் புகுந்தாள் என்பது வழக்கு. உடனே பொலிசார் வழக்குத்தொடர்ந்தனர்.

இந்த வழக்கை செஷன்ஸ் ஜட்ஜ் விசாரணை செய்து எதிரியைக் குற்றவாளி என பதந்து ஆயுள் பரியந்த தீவாந்திர தண்டனை அனுபவிக்கத் தீர்ப்பு 6-5-36 ல் வெளியிட்டார்.

---

### "மலையாளத்தாரை விட்டுவிடவேண்டும்"

திருக்கோணமலைப் பட்டாளக் கட்டடங்களில் வேலை செய்தோர் தங்களுக்குக் கூலி போதாதென்று வேலை செய்தலை நிறுத்தியபோது வேலைக் குத்தகை ஏற்றவர் மலையாளிகளைக் கொழும்பிலிருந்து தருவித்துக் குறைந்த கூலிக்கு வேலை செய்வித்து வந்தார். ஆனால் திருக்கோணமலையிலுள்ள தொழிலாளர் சங்கத்தார் கூட்டங்கள் கூட்டி தீர்மானங்களைச் செய்து குத்தகைக்காரனுக்கு அனுப்பிய போது அக்குத்தகைக்காரன் அவைகளெல்லாவற்றிற்கும் சம்மதித்துக்கொண்டு வருகிறசனிக்கிழமை பழைய கூலிக்காரருக்கு வேலை கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறாராம்.

---

### இலங்கை அரசாங்கசபை திரு. R. ஸ்ரீ பத்மநாதன் அவர்களுடைய பிரேரணை

மன்னார் முல்லைத் தீவுப் பகுதிப் பிரதிநிதியாகிய திரு. R சிறீ பத்மநாதனவர்கள் பின் வரும் பிரேரணைகளை அரசாங்கசபைக் கூட்டத்தில் எடுத்தாளுவதாகத் தெரிவித்திருக்கின்றார்.

(1) மன்னாரைச்சேர்ந்த முருங்கன் என்னும் ஊரில் ஒரு வைத்தியசாலை தாபிக்கவேண்டுமென்பது.

(2) முல்லைத்தீவுக்கும் பரந்தனுக்குமுள்ள பிரசித்த தெருவை எல்லா விதமான ரதங்களும் போக்குவரவு செய்யத்தக்கதாகப் பகிரங்க வேலைப்பகுதியார் மூலமாகச் செப்பனிடுவிப்பது.

---

### புன்னாலைக் கட்டுவன் ஆஸ்பத்திரி

புன்னாலைக்கட்டுவன் அரசாங்க ஆஸ்பத்திரி இப்போது வாடகைக் கட்டிடத்தில் இருந்துவருகிறது. அக்கட்டிடத்தின் சொந்தக்காரர் மேற்படிகட்டிடத்தைச் சேர்ந்த ஆறு ஏக்கர் நிலத்தை இனமாக ஆஸ்பத்திரிக்குக் கொடுப்பதாகவும் கட்டிடச் செலவுக்காக அவருக்கு 2500 ரூபா கொடுத்தால் ஆஸ்பத்திரி இருக்கும் அக் கட்டிடத்தை விட்டுவிட அவர் தயாராகஇருப்பதாகவும் தெரிவித்திருக்கிறாராம். இது சம்பந்தமாக அரசினர் கூடிய சீக்கிரம் ஆலோசனை செய்வார்களென்றும் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வார்களென்றும் தெரிய வருகிறது. காங்கேசன் துறைப் பிரதிநிதியான திரு. நடேசன் இது சம்பந்தமாகக் கூடியசீக்கிரம் அரசாங்கசபையில் ஒருபிரேரணையைக் கொண்டுவருவாரென்று கூறப்படுகிறது.

---

## சைவ பரிபாலன சபை.

### 1905-ம் 06-ம் ஆண்டுகளில் நிகழ்ந்தவை.

(11-5-36 இன் தொடர்)

1904-ம் 905-ம் ஆண்டுகளில் மாணவர் சம்பளவரவு ரூ. 3625 சதம் 12ம், அரசினர் உதவி நன்கொடைப்பணம் ரூ2067 சதம் 50ம், நன்கொடையால் ரூ. 3195 சதம் 10ம், பல சில்லறையாய் ரூ. 373 சதம் 14ம் ஆனது. இந்த வருஷத்தில் உபாத்தியாயர் வேதனம் ரூ. 6014 சதம் 73ம், கல்லூரிக்கட்டடத்தில் ரூ. 2569 சதம் 28ம், சில்லறைச் செலவுக்காக ரூ 93 சதம் 03ம் ஆனது. 1905ம் ஆ கார்த்திகைமீ 3உ a class for the Madras Matriculation examination சென்னைச் சர்வகலாசாலையாரால் பரீக்ஷிக்கப்படும் மற்றிக்குலேசன் வகுப்பு ஆரம்பிக்கலாயிற்று.

### இந்துவாலிபர் சமாஜம்

1905ம் ஆ கார்த்திகைமீ 16உ இந்துக்கல்லூரி மண்டபத்திலே கூடிய மகா சபையிலே அத்துவக்காத் அ. கனகசபை, வி. காசிப்பிள்ளை, சி. த. மு. பசுபதிச்செட்டியார் என்னும் மூவரும் போஷகர்களாகவும், ச. லோட்டன் கனகரத்தினம், தலைவராகவும், ச. சபாரத்தின முதலியார். அ. சபாபதி, ஆ. கதிரவேலு என்னும் மூவரும் உபதலைவர்களாகவும், வ. மு. வியாகேசு, இ. கந்தையா என்னும் இருவரும் காரியதரிசிகளாகவும், சி. கந்தையாபிள்ளை தனாதிகாரியாகவும் ந. சிவகுருநாதர், பெ. கார்த்திகேயபிள்ளை, சி. கந்தையா, C. K. நவரத்தினம், இ. செல்லையா, இ.நா. அருளம்பலம், க. வேற்பிள்ளை ஆ. மு. சோமாஸ்கந்தர் என்பவர்களை அங்கமாகவுங் கொண்ட ஒரு திருவாகசபை நியமிக்கப்பட்டது.

இச்சபையினதும் இந்துக் கல்லூரி அதிகாரசபையினதும் அக்கிராசனாதிபதியாயிருந்த அத்துவக்காத் அ. கனகசபை 1906 ஆ வைகாசிமீ இலங்கைச் சட்டநிரூபண சபையிலே தமிழ்ப் பிரதிநிதியாக நியமிக்கப்பெற்றார்.

இச்சபையினதும் இந்துக் கல்லூரி அதிகாரசபையினதும் தனாதிகாரியாயும் கல்லூரியின் விசேஷஸ்தாபகர்களுள் ஒருவராயுமிருந்த சி. த. மு பசுபதிச் செட்டியார் தமது ஐம்பதாம் வயதில், விசுவாவசு வரு மாசி மீ 26உ (9-3-1906) சிற்சபா நடராஜ மூர்த்திக்கு வருஷத்தில் நடக்கும் ஆறு அபிஷேக தினங்களுள் ஒன்றாகிய மாசிமாதத்து பூர்வபக்ஷ சதுர்த்தசித்திதியில் சுக்கிரவாரத்தன்று மகநக்ஷத்திரத்தில் சூரியோதயத்தில் "தாம் இடையறா அன்புடன் பூசித்து வந்த நடராஜப்பெருமானின் குஞ்சிதபாத நீழலையடைந்துவிட்டனர்". இவர் இறந்த அன்று காலை இந்துக் கல்லூரிப் பிரதமாசிரியர் N. செல்வத்துரை, கல்லூரி ஆசிரியர்களையும் மாணவர்களையும் கல்லூரி நடுமண்டபத்தில் கூட்டி பசுபதிச் செட்டியாரைப்பற்றியும் அவர் இந்துக்கல்லூரிக்கு ஆற்றிய சேவைகளைப்பற்றியும் விரிவாக உருகத்தோடு ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினாராம். செட்டியாரது பூத உடம்பு மயானத்துக்குக் கொண்டுபோகப் பட்டபோது அதற்கேற்ற விதமாய் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த இந்துசாதன ஆலயம், இந்துக் கல்லூரி விக்ரோரியா வாசகசாலைகளின் எதிரில் இந்துசாதன மனேஜர் சி. கந்தையாபிள்ளையும், பிரதமாசிரியரும், தமிழ்ப் பண்டிதர் சோமாஸ்கந்தபிள்ளையும் கண்ணீரோடு புஷ்பமாரி பொழிந்தார்களாம். அவரின் ஞாபகார்த்தமாக அன்று இந்துக்கல்லூரி இந்துசாதன ஆலயம் விக்ரோரியா வாசகசாலை ஆகிய எல்லாம் மூடப்பெற்றன. சைவ பரிபாலனசபை இந்துக்கல்லூரி அதிகாரசபைகளின் அங்கத்தவர்கள், பலரும் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள், இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பத்திராசிரியர்கள் மனேஜர் முதல் கருமம் ஆற்றுவோர்வரையுள்ள எல்லோரும் மயானம்வரை சென்று கடைசிக் கடன் ஆற்றி மீண்டனராம்.

இவரது தேகவியோகத்தைப்பற்றி Hindu Organ பத்திராசிரியர் தமது தலை அங்கவியாசத்திலே எழுதியதில் ஒருபகுதி இது:

"...........He received such a competency of English knowledge as stood him in good stead in the good work he did during the closing 15 years of his life in promoting the best interests of the Jaffna Hindu College. He was clearly impressed with the fact that the best charity was that of founding and maintaining a College affording every facility to his countrymen to drink deep at the fountain of knowledge, which would leadto right action in all the activities of life .......Of the few gentlemen who with a whole-hearted devotion worked for the bringing up of the school, which has grown to be a college and has been incorporated as the Jaffna Hindu College, Mr. Pasupathy Chettiar was the one upon whom fell the most difficult task of planning and engineering the construction of the College Buildings, which have been nearly three-fourths completed.

The Hindu College buildings will stand as a monument of his skill as an architect and of his self sacrificing labours in a good cause. In the early years when the school was struggling for its existence, he was the prophet of optimism who encouraged his drooping colleagues and proved by his bold action, what seemed impossible to be possible. He was always full of ideas for the development of the school and confident of success urged his influential colleagues to work for the end. The sequel has proved the sagacity of his Judgement. A struggling school in a shed with about 60 boys on the roll has grown to a second grade college with nearly 460 boys on the roll at the time of his death. In the death of Mr. Advocate Nagalingam, the College lost the leading spirit of the movement; in the death of Mr. Pasupathy Chettiar, it loses another able, energetic and sincere supporter who with a singleness of aim and hearty devotion to the work spent himself in the good and noble work, which at the time of his death had so far established itself that its permanency and future usefulness are almost assured.

There was one period of his life which was a little embittered and checkered, but the fifteen years of the close of his life were years of strenons work for the public good, the best part of a rather short life. These fifteen years were wholly devoted to a good cause and we must award the need of praise for the truly noble work in which he had taken a part and played an important part.........." பசுபதிச்செட்டியாரது தேகவியோகத்தை கேள்விப்பட்ட உடன் இந்துக்கல்லூரியிலே பல வருஷகாலம் ஒரு புரொபெசராயும் பிரதித் தலைமையாசிரியராயுமிருந்த J. K[illegible]சிவாயம்பிள்ளை B. A., B. L. [illegible]Hindu Organ இலே எழுதியுள்ளதில் ஒரு பகுதி இது:—"It is more than six years since I had my last talk with this public man with whom I had the good fortune of moving in rather intimate terms for more than five years. I read about his death in the Hindu Organ, only this morning and my feeling.

—(வரும்)

## கனிஷ்ட பாடசாலை விடுகைத் தாரதாப்பத்திர வகுப்பு (1937) [J·S·C·] இலக்கியக் குறிப்பு,

இது சென்னைச் சர்வகலாசங்கத்தாரால் 'வித்துவான்' பட்டம் வழங்கப்பெற்றவரும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வண்ணார்பண்ணை, திரு. ந. சுப்பைய பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. பதவுரை, கருத்துரை, (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், சொல்லிலக்கணம், சொல் நயம், பொருள் நயம், அணி நயம் முதலியவற்றைவிளக்கும்) குறிப்புரை முதலியன அடங்கியுள்ளது.

### செந்தமிழ் வாசக சிந்தாமணி

உயர்தர வகுப்புகட்கு உபயோகமானது. அரும்பத விளக்கம் செய்யுள்கட்கு உரை நன்கு எழுதப்பட்டுள்ளன.

விலை சதம் 75.

சண்முகநாதன் புத்தகசாலை அதிபர்கள்.

(Mis 12. 13-4-36.) தி வண்ணார்பண்ணை.

## ஆரோக்கிய லேகியம்.

சிறந்த மலசுத்தி ஔஷதம்.

மலபந்தமே உடலின் ஆரோக்கியத்துக்கு இடையூறாகும். ஆரோக்கிய லேகியம் சாப்பிடுவதால் தினசரி கிரமமாய் மலங்கழியும்; சோம்பல் நீங்கும்; தினசரி அலுவல்களுக்கு உற்சாகம் உண்டாகும்.

இன்னும் சித்திரை சலிதம், நீருடன் சலிதமாதல், உடம்பு இளைத்து வருதல், கை கால் எரிச்சல், குடைச்சல், மேகம். பத்தியமில்லை.

20 ரூபா எடை டின் விலை ரூ. 2-00 தபால்செலவு சதம் 75.

### நீ ர ழி வு க் கு.

அப்ரேக் செந்தூரம் கைகண்ட மருந்து.

பரீக்ஷை:—ஒரு மண் கலசத்தில் வெளி அழையும்படியான சிறிய துவாரங்கள் போட்டு அதில் ஜலம் விட்டு ஒழுகும்போது நமது அப்ரேக் செந்தூரம் ஒரு சிட்டிகை எடுத்துப் போட்டால் ஒழுகும் ஜலம் உடனே அடைபட்டுவிடும். அதேபோல் நீரழிவில் தாதுபுஷ்டி ஒரே நீரைக் குறைத்து நீரில் சர்க்கரை இருப்பது, தாகம் வரட்சி இவைகளைக் குணமாக்கும்.

20 நாள் மருந்து விலை ரூபா 12-50 சதம்.

ஸ்பெஷல் அநுபானம் சதாவரி லேகியம் ரூபா 4-00.

### த ங் க ப ஸ் ப ம்.

தாதுபுஷ்டிக்கு ஓர் வரப்பிரசாதம்:

மெலிந்த தேகத்தைப் போஷித்து சரீரத்தில் புதியரத்தத்தை ஊறச்செய்து அளவற்ற பலம், ஆண்மை வீரிய விருத்தி உண்டாக்கும். பத்தியமில்லை. (விபரமான கேட்லாக் இலவசம்.)

30 வேளை தங்கபஸ்பம் ரூபா 10. அநுபானம் லேகியம் ரூபா 2-50.

வெளிநாட்டார் ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.

Q 19. 27-4 to 26 7-36 தி (Palni S. I.)

## "இரதி மன்மத" சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீரணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 0 0

தபால்சார்ஜ வேறு.

**N. B.** முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—

மலையாள "சித்த" ஔஷதாஸ்ரமம்,
2 மெயின்ரோட்,
கோல்லம், **Quilon S. India**

H 208. 1-12-35 to 31-5 36

## வீ. பீ. நிக்கலஸ் அன் சன்ஸ் (வங்கி)

(1920-இல் ஸ்தாபிக்கப்பட்டது.)

2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

தந்தி விலாசம்: "ஜாவ்னா பாங்க்" தெலிபோன் இல. 27.

உண்டியல்:—கொழும்பு, இந்தியா, மலாயா முதலிய இடங்களுக்கு நேராகவும் உலகத்தின் [illegible] பிரதான இடங்களுக்கு விசேஷ ஒழுங்கு செய்தும் உண்டியல் கொடுக்க[illegible]

கடன்:—நகைகள் அடைவாகப்பெற்றுக்கொண்டு 12வீதம் வட்டிக்குப்பணங்கொடுக்கப்படும். தகுந்த பிணையுடன் தினசரிப் பற்றுவரவுக் கணக்கின் பேரிலுங் கடனெடுக்கலாம்.

பணமாற்று:—இந்திய சிங்கப்பூர் நாணயங்கள், செட்டுக்கள் வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கப்பற்றுண்டு:—உலகத்திலுள்ள எந்தப் பிரதான துறைமுகத்திலும்போய் இறங்கத்தக்கதாக, கமிஷனின்றி கப்பற்றுண்டுகள் எடுத்துக்கொடுக்கப்படும்.

மேற் கூறப்பட்டவைகளும் இன்னுஞ் சகலவித வங்கிமுயற்சிகளும் எமது யாழ்ப்பாணநாட்டினரின் வசதிக்கேற்ற பிரகாரஞ் செய்யப்படும்.

எஸ். பீ. ஜோசேப்,
மனேஜர்.

(Y. 188. 21-10-35—20-10-36.) தி

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பேருக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபத்திரங்களையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில்லலக கண்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பேருக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமான்தாகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸிலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதப்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரசபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலக்குடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயுவின் நோய் அநேக கடுமையான வியாதிகள் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர்பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு.

Y55 1-1-34 to 31-12-36) மேசைன்.

வண்ணைநகர்

தையல் நாயகி

## கலிவெண்பா

## திருவூஞ்சல்

முத்துக்குமாரசுவாமி

## திருவூஞ்சல்,

இவை இப்பொழுது தெளிவாக அச்சிடப்பெற்று ஓரே பிரதியாக வெளிவந்துள்ளன.

விலை சதம் 5.

மானேஜர்,
சைவப்பிரகாசயந்திரசாலை.
வண்ணார்பண்ணை.


## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி, செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பந்தி (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | ,, ,, | ,, | 5-50 |
| ¼ | ,, ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் கேட்டுக் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

[illegible]னேஜர்
[illegible]திரசாலை


# Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.
தபாற்கூலி 45 சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, [illegible] நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், கெளிகளிருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

ரஸிகர் முக்கியமாகத் தெரிந்துசொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும் இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று ஊர்க்குருவிகூட ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலைமயக்கம், கண் எரிவு, தலைவலி, இளநரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சாமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னாண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காவில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.

(H 332. 20-3-36 to 19-9-36)


"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."

## பத்திரக் கிரயம்.

( முற்பணமாக அனுப்புதல் வேண்டும். )

| யாழ்ப்பாணப் பட்டினம் | தமிழ் ரூ. ச. | ஆங்கிலம் ரூ. ச. | இருபிரதிகளும் ரூ. ச. |
|---|---|---|---|
| (தபாற்சங்க எல்லைக்குட்பட்ட) | | | |
| ஒருவருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 9 - 00 |
| ½ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 00 | 2 - 00 | 3 - 75 |
| இலங்கை இந்தியா | | | |
| ஒருவருடத்திற்கு | 8 - 00 | 8 - 00 | 12 - 00 |
| ½ வருடத்திற்கு | 4 - 50 | 4 - 50 | 7 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 50 | 2 - 50 | 4 - 50 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள் | | | |
| ஒருவருடத்திற்கு | 9 - 00 | 9 - 00 | 13 - 00 |
| ½ வருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 7 - 50 |
| ¼ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |

தனிப்பிரதி சதம 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-

ப. மு. ரா. முத்துச்சாமி செட்டியார்,
"நியூஸ்மார்ட்"
89. கோவில்தெரு,
தம்பனித்தெரு.

பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 18th May 1936,